921

... M 2330

...TOR & ...RIETOR } வை. மு. கோதைநாயகி அ...

# JAGANMOHINI

மலர் V.] [இதழ் 7.



OFFICE OF THE REGISTRAR OF ... MADRAS
7 AUG 1928

தனிப் பிரதி அணை 3.

I
ஊ211,N122J9
N28·5·7.
(18284)

ஜகன்மோகினி ஆபீஸ்.
26, தேரடித் தெரு, : : திருவல்லிக்கேணி, மதராஸ்.

குறிப்பு:—ஒவ்வொரு மாதமும் கடைசித் தேதிக்குள் சஞ்சிகை வெளியாகும்.

## நமது சந்தா நேயர்கட்கு முக்கிய அறிவிப்பு

பிரதி ஆங்கில மாதமும் கடைசித் தேதியில் நமது பத்திரிகையை எல்லா சந்தா நேயர்களுக்கும் அனுப்புகிறோம். அங்ஙனமிருக்க சிலர் அடுத்த சஞ்சிகை வந்தபிறகு முன் மாதத்து சஞ்சிகை வரவில்லையென்றும், நாம் அனுப்பத் தவறிவிட்டதாகவும் எழுதுகிறார்கள். இன்னும் சிலர் 2, 3 மாதங்கள் கழித்து சஞ்சிகை வரவில்லையென்கிறார்கள். இது மிகவும் விசனிக்கத் தக்கதே. ஒரு மாதத்து சஞ்சிகை அடுத்த மாதம் 10 தேதிக்குள் உள் நாட்டு சந்தா நேயர்களுக்கும், 15 தேதிக்குள் வெளி நாட்டு சந்தா நேயர்களுக்கும் கிடைக்காவிட்டால் தபாலில் தவறிவிட்டதெனத் தெளிந்து உடனே நமக்குத் தெரிவித்தால் வேறு சஞ்சிகையை யனுப்புவோம். அப்படிச் செய்யாதவர்களுக்கு மூன்று அணு ஸ்டாம்பு அனுப்பினால்தான் வேறு சஞ்சிகை அனுப்பப்படும்.

நமக்கு எழுதும் கடிதத்தில் தங்களது **சந்தா நம்பரை** மறக்காமல் குறிப்பிடவேண்டும்.

இடம் மாறும் சந்தா நேயர்கள் புது விலாசத்தை உடனே நமக்குத் தெரிவிக்கவேண்டும். அப்படித் தெரிவிக்காததால் சஞ்சிகை தவறி விடின் அதற்கு நாம் ஜவாப்தாரியல்ல.

மானேஜர்:—:"ஜகன்மோகினி" ஆபீஸ்
திருவல்லிக்கேணி சென்னை

---

## "ஜகன்மோகினி"யின் முதல் இரண்டு ஆண்டுகளில் வெளிவந்த நாவல்கள்

| | | |
|---|---|---|
| மலர் I. | ஸ்ரீமான் வடூவூர் கே. துரைசாமி அய்யங்கார் எழுதிய காளிங்கராயன் கோட்டை ரகசியம் (2-பாகங்கள்) | ரூ. 4 0 0 |
| மலர் II. | விலாஸவதி (2.பாகங்கள்) | ரூ. 3 0 0 |
| | ஸ்ரீமான் அ. முத்துகிருஷ்ணன் எழுதியவை. | |
| | கனக சபை ... ... | ரூ. 1 8 0 |
| | கோகிலம் .... ... | ரூ. 0 6 0 |

"ஜகன்மோகினி" ஆபீஸ்
26, தோடித் தெரு
திருவல்லிக்கேணி, சென்னை.

ஓம்

# ஜகன் மோகினி

ஐயுணர் வெய்தியக் கண்ணும் பயமின்றே
மெய்யுணர் வில்லா தவர்க்கு
ஜகன்மோ கினியென்னுஞ் சஞ்சிகையைக் காக்க
ஜகன்மோ கினி ! மனத்தைச் சார்ந்து

| மலர் V | விபவஞு ஆனிமீ June 1928. | இதழ் 7 |
|---|---|---|


## கடவுள் வணக்கம்

### திருவல்லிக்கேணி பஞ்சரத்நம்

#### ஸ்ரீ வரதராஜர் துதி

4. வாரிஜ மலர்கொய்ய வாஞ்சையுடன் குஞ்சரம்
வாவியில் சென்றிறங்க
வன்மீனும் கரியதன் காலிணைக்கவ்விட
வருந்திக் கண்ணீர் பெருக்க
பாரதிர் தொனியுடன் ஆதிமூலா வென்று
பாங்குடன் ஓலமிட்ட
பத்தனின் இடர்நீக்க விரைவுடன்
ககமீதில் பண்பாகத் தோன்றி நின்தன்
வீறுசேர் ஆழியால் முதலையைக் கொன்றுபின்
வேழத்தைக் கருணையோடு
மேதினிபுகழ்ந்திடக் காத்திட்ட வரதனே !
விண்ணவர் பணிநாதனே !
சீருடைய திருவல்லிக் கேணிதனில் சிறப்புடன்
சேவைதந் தருளும் கோனே !
திருமகள் நாதனே நறுமலர் பாதனே !
சீதரா ! சரணம் கோனே !

(தொடரும்)

வை. மு. கோ.

# அநுபவ நீதிசாரம்.

(54) உன் கணவனைப் பற்றியும் மற்றையோரைப் பற்றியும் உன்னிடம் தூஷணையாக உனக்குப் பரிந்து பேசுவதுபோலப் பேசி உன் வார்த்தையை வாங்கிக்கொண்டு அத்துடன் நூறு சேர்த்து உன்னைத் தூஷித்த மனிதரிடத்தில் மூட்டிவைத்து அதன் மூலமாய் உனக்கு அதிகமாகத் தீங்கு தேடும் குண்டுணிகளும் பலர் உண்டு. அவர்களிடம் உஷாராயிரு.

(55) இன்பத்தையும் துன்பமாகச்செய்யும் மனைவியுடன் வாழ்தலைவிட ப்ராம்மச்சரியம் கொள்வது மகிழ்ச்சியினும் மகிழ்ச்சி.

(56) அகாரணமாக ஆத்திரத்தினுல் வாய்க்கு வந்தவாறு திட்டியதன் பயனை, அடங்கியபின் அறிந்து வருந்துவதில் பயன்யாது?

(57) வருத்தமறியாதவனிதைக்குத் தன் கணவன் எந்தவகையில் த்ருப்தி செய்யமுயன்றாலும் அது வீணாகி அவனை வருத்த முறவேசெய்யும்.

(58) தான்மிக்க தர்மிஷ்டன்போல வாயினால் பல பேர் மத்தியில் சௌடாலடிப்பான். அதை உண்மை என்று நம்பிய பேதையர்கள் சிலர் காலணா யாசகம் கேட்டாலோ அவர்கள் வந்த நிலைமையோடு திரும்பிச் செல்வது துர்லபம் தான்.

(59) ஒருகாரியத்தை ஆரம்பித்தால் அதனைத் தூஷணைசெய்யப் பலர் முற்படுவர். ஆனால் அக்காரியம் நன்மையா தீமையா என்பதை ஆராய்வதற்கு அவர்கள் மனம் நாடுவதில்லை.

(60) முதலில் உன்னுடைய கடமைகள் என்னவென்பதை நீ கவனித்தாயா? பிறருக்குப் போதிக்க வந்துவிட்டாயே?

(61) ஆடம்பரமாய்ப் பெரியகடையில் நுழைவதும் அங்குள்ள பண்டங்களைப் புரட்டிப்பார்ப்பதும் ஏதோ ஒரு விலாசத்தைக் குறித்து அங்குகொண்டு வரும்படி சிலவற்றைப் பொறுக்கி வைத்துவிட்டுச் செல்வதும், அவன் சொல்லிய விலாசத்திற்குச் சாக்கை எடுத்துச்சென்று அலைந்து அந்த விலாசம் பொய் என்பதையறிந்து திரும்பிவிடச் செய்வதுமான அனுமதேய டம்பாச்சாரி ப்ரபுக்கள் எத்தனையோ பெயர்களுண்டு.

(62) ஒருத்தி பிறர் வீட்டுக் கலியாணத்திற்கு ஊர்முழுவதையும் ஜகப்ரசித்திபெற்ற தானே அழைக்கச்சென்று அழைத்து அதிகச் செலவை வைக்கத் தயார்; தன்வீட்டுக் கலியாணத்திற்கோ முகமறியாத ஊருக்குப் புதியவர்களை யனுப்பித் தந்திரமாகச் சில வீட்டாரை அழைக்கச் செய்கிறாள். என்னேசாமர்த்தியம்!

(63) மாப்பிள்ளை முதலில் வரும்போது ரயிலடிக்கு மனிதரும் மோட்டாரும் எதிர் செல்லும். இரண்டாந்தரம் வரும்போது வண்டிமட்டும்: மூன்றாந்தாம் இரண்டுமில்லை; நான்காந்தரம் வரப்போவதேயில்லை.

(64) வெளியிலிருந்து ஆவலோடு தன் மனைவியைக்காண ஓடிவரும் யுவகனுக்கு வீட்டில் வந்தவுடன் 'இழவெடுத்த வீட்டில் பாதிராத்ரிபிண்டந்தானே' என்று ஒரு வார்த்தை சொல்வதைக் கேட்டவுடனே அவன் இன்பம் துன்பமாக மாறிவிடுகின்றது.

(தொடரும்)

வை. மு. கோ.

24/1122

# ஹாஸ்யத்துணுக்குகள்.

(1) ஓர் பெரிய சபையில் ஒரு பாகவதர் வெகு அட்டகாசமாக நின்று கொண்டு ஒரு கரத்தில் சப்ளாக் கட்டையை வைத்துக் சக்குச் சக்கென்று அடித்துக்கொண்டும், மற்றொரு கரத்தினால் தமது பட்டுவேஷ்டியைத் தடவிக் கொண்டும் வெகு காம்பீரமானதோற்றத்துடன் ஹரிகதையாகிய பிரகலாத சரித்திரத்தை நடத்திக்கொண்டிருக்கையில், கதையின் ஓர் பாகத்தில், 'இரணியன், தனது ஆளைநோக்கி, "யாரடா அங்கு?" என்று அதட்டிய குரலால் அழைத்தான்' என்று சொல்லுமிடத்தில் அந்த இரணியனைப்போலவே நடித்து உரத்த தொனியில்' "யாரடா அங்கே?" என்று ஒரு பெருஞ் சத்தம் போட்டார். அதே தருணம் அந்தச் சபையிலிருந்த ஜனங்களின் மத்தியில் நின்ற ஒருவன் பாகவதரருகில் வந்து, "ஐயா! நான் தான் தெரியவில்லையா? தங்களுடைய பழைய நாளைக்கடன்காரன். இப்போதேனும் இந்தக் கதையில் வரும் தொகையைமட்டுமாகிலும் கொடுக்கமாட்டீர்களா என்று காத்திருக்கிறேன்" என்றான். இதைக் கேட்ட பாகவதர் பெட்டிப் பாம்பு போல் அடங்கி வெட்கினார்; மற்றையோர் நகைத்தனர்.

(2) **புருஷன்:**—என்டி! எப்போது பார்த்தாலும் பிடாரி போலத் தலையும், துணியுமாக விருக்கிறாயே! ஒழுங்காகத் தலை சீவிக்கொண்டு நல்ல துணி உடுக்கலாகாதா?

**மனைவி:**—70 வயது வாலிபனை 17 வயதுப் பெண் மணம் செய்து கொண்டதற்குப் பிடாரிக் கோலத்துடன் இருந்தால்தான் தப்பிப் பிழைக்கலாம்.

(3) **ஒருவன்:**—(மற்றொருவனைநோக்கி) ஆகாயவிமானம் வந்திருக்கிறதே அதற்குக் கட்டணமும் குறைந்திருக்கிறதாமே தமாஷாக அதில் ஏறிச் சுற்றிவரலாம் வருகிறாயா?

**மற்றோ:**—போய்யாபோ! வீணாக நமது உயிரை நாமே ஏன் கொலை செய்துகொள்ளவேண்டும்? உனக்கு உயரப் பறக்கவேண்டுமானால் நிரம்ப 5.6. மொந்தையை அந்தமாக விட்டுவிட்டால் சொந்தமாக ஊர் முற்றும் சுற்றி விந்தையாகப் பார்க்கலாம்; நமது கைப் பணமும் அதிகமாகச் செலவாகாது. உயிரும் நீங்காது. ஆகாய விமானத்தில் ஏறாமல் ஆகாயத்திலேயே பறக்கலாம். இந்த உபாயம் தெரியாதா!

(4) **கந்தன்:**—என்ன யோசிக்கிறாய்?

**முகுந்தன்:**—யோசனையா! பிழைக்கும் வழி தெரியவில்லை. என்ன விதமான வழி தேடலாம் என்று பார்க்கிறேன். ஏதேனும் ஓர் வழி சொல்லேன்.

**கந்தன்:**—நல்ல சமயத்தில் கேட்டாய். சொல்கிறேன்; ஆகாய வெளி யிலிருந்து மழை பெய்யவில்லை. அதனால் ஜனங்கள் மிகுந்த கஷ்டப்பட்டுத்த வித்து மேலதிகாரிகளிடம் போய் முறையிட்டுக்கொண்டார்களாம். உடனே அவர்கள், "தினம் 2 மணி நேரம் வாட்டர் ஸப்ளை செய்யவேண்டும்; இல்லை யேல் சட்டப்படி தண்டனை யடைய நேரும்" என்று ஓர் நோட்டீஸ் எழுதி அதை வருணபகவானுக்கு நேரில் கொண்டுபோய் கொடுக்கும்படி உத்தர விட்டார்கள். அதைக் கொண்டுபோவதற்கு யாரும் முன் வரவில்லை. ஏனெனில் பயமாக விருக்கிறதாம். அதனால் அந்தக் கடிதத்தைக் கொண்டு போய்க் கொடுப்போர்க்கு 1000 ரூபாய் இனாம் அளிக்கிறதாக அதிகாரிகள் ஓர் ஏற்பாடு செய்திருக்கிறார்கள். நீ பிழைப்புக்கு வழி தேடுவதால் நான் இந்தவேலை யைத் தெரிவித்தேன். நீ வேண்டுமானால் அதைக் கொண்டு போய் வருண னிடம் கொடுத்து இனாம் பெற்றுப் பிழைக்க வழி செய்துகொள்.

இதைக் கேட்ட முகுந்தன், "நமது வயிற்றின் கொடுமையால் கண்டவர் களிடத்திலெல்லாம் பிழைக்க வழி கேட்டு அவமானப் பட நேர்ந்ததே" என்று வருந்திச் சென்றான்.

(5) **புருஷன்:**—ஏண்டி! இன்று என் ஆத்தாளுக்கு தெவசமாமே! ஒரு பாப்பான் என்னை ஓட்டலில் கண்டு சொன்னான். மணி. 10 அடிக்கப் போகிறதே! என்ன செய்வதடி! பாப்பான் வருவானே.

**மனைவி:**—இதற்கு என்னைக் கேட்கவேண்டுமா? இப்போதுதான் ஓட்டல்காரப் பாப்பானுக்கு 8 அணா தட்சணை கொடுத்துவிட்டுக் காலைச் சாப்பாடு தின்றாயிற்று. இன்று வேண்டுமானால் சமையல் செய்யவேண்டாம். இன்னொரு சாப்பாட்டுக் கடைக்காரப் பாப்பானுக்கு 8 அணா தக்ஷணை கொடுத்து அரிசி பருப்புக் கொடுத்துச் சமைக்கச் செய்து சாப்பாட்டை வரவழைத்து இருவரும் தின்று விடலாம்; அதுவும் பாப்பானுக்கு அரிசி கொடுத்த பலன் ஆகவில்லையா! பாப்பான் வந்து கேட்டால் கொடுத்தாய்விட்டதென்று நானே சொல்லிவிடுகிறேன்.

(6) **ஓர் மாது:**—ஐயா ஜோஸியரே! எனக்கு ஒரு குழந்தைகூட பிறக்க மாட்டேனென்கிறதே? அதற்கு ஏதேனும் பரிகாரம் சொல்லுங்களேன்.

**ஜோஸியர்:**—அம்மா! உங்களுக்குப் பிரம்ம தோஷம் கொஞ்ச மிருக்கிறது. அது நிவர்த்தியாவதற்குத் தினம் இரண்டு பிராம்மணர்களுக்கு அன்னமிட்டு நாலணு தக்ஷிணை கொடுத்துவந்தால் சரியாகிவிடும்; குழந்தை யுண்டாகும்.

**மாது:**—ஐயோ! இதுதானு! தினம் என் மைத்துனருக்கும் என் புருஷருக்கும் சாப்பாடு போட்டு 4 அணு வண்டிக்கு தக்ஷிணை கொடுத்து வரும் வழக்கத்தை 8 வருடமாகச் செய்து வருகிறேனே, குழந்தை பிறக்கவில்லையே! நாங்கள் பிராம்மணுள் தானே? எங்கள் வீட்டுப் புருஷர்களும் பிராம்மணுள் தானே! யாருக்குத் தானம் செய்தாலும் தோஷம் நிவர்த்தியாகவேண்டியது தானே; இன்னும் ஆகவில்லையே!

**கெவ. மு. கோ.**

— —

## ஏரோப்ளேன் ஹாஸியம்.

ஒருநாள் காலையில் பொன்னம்மா ளென்னும் மாது தனது பந்துவாகிய சுப்பம்மாளைப் பார்த்து "சுப்பு! இன்று அமாவாசை யாயிற்றே! கோயிலுக்கு வரவில்லையா! என் ஒருவாறுய் உட்கார்ந்திருக்கிறுய்?" என்றுள்.

**சுப்பு:**—ஐயோ! அந்த வெட்கக்கேட்டை என் கேக்கரே? என்னுடைய நாட்டுப் பெண் பெங்களூரிலிருந்து இன்று வந்தாள். வரும்போது ஏதோ பக்ஷி இறகுகளைப் போல சிலவற்றையும். பெருத்த முட்டை போன்ற சிலவற்றையும் கொண்டுவந்தாள். அவற்றை என்னவென்று கேட்டதற்கு அவை கோஸ் முட்டைகள் என்றுள். இதைக் கேட்டதும் நான் வாயிலும் வயிற்றிலும் அடித்துக்கொண்டு "ஐயோ! இழவே! இப்படியும் ப்ராமணீயம் கெட்டுவிடுமா? முட்டையும்இழவும் தின்னலாமா? அதிலும் அமாவாசை யாயிற்றே "என்றேன். அதற்கு அந்த கர்வம் பிடிச்சசிறுக்கிசிரித்துக் கொண்டே போய் விட்டாள். என் வறிறெரிகிறது. அந்த முட்டையை வேகவைக்கிற நாத்தம் பொறுக்காதே உன் வீடு வந்தேன். 'அதுவெளுப்பாய் தேங்கா யளவு இருக்கிறது. அது எந்த கோழி முட்டையோ தெரியலே நான் இப்படிப் பட்டினி கிடக்க முடியாது; நான் ஊருக்குப் போய் விடுகிறேன். அது எந்த முட்டை என்று உனக்குத் தெரியுமா?

**போன்:**—ஐயோ டீ, சுப்பு!'அத்தனை பெரிய முட்டை எந்தக் கோழியும் வாத்தும் போடாது. இப்பதான் நெனவு வரது. அதாவது சீமையிலிருந்து **ஏரோப்ளேன்** என்ற ஓர் பெரிய பக்ஷி இறகை விரித்துக்கொண்டு கோ என்ற கோஷத்துடன் ஆகாயத்தில் பறந்து வந்திருக்கிறது. அதனுடைய முட்டையாகத்தான் இது இருக்கனும். அது வெகு பெரிய பறவை; அதன் முட்டை தேங்காயளவு மிருக்கும்; பூசணிக் காயளவு மிருக்கலாம். அது தினம் இந்த ஊரிலும் பறக்கிறதே டீ! நான் உனக்குக் காட்டுகிறேன் அது வெள்ளைக்காரப் பறவையாம். அதன் கூச்சலைக் கேட்டால் பயமாயிருக்கிறது. இந்த அனுசாரப் பீனடகளோடு உனக்கென்ன? நீ ஊருக்குப் போய்விடு,"—என்றாள்.

A. கிருஷ்ணபாய்.

---

## பரிசுகளின் விவரம்.

ஆருவது சஞ்சிகைக்குப் பிறகு பணம் அனுப்பியவர்களில் கீழ்கண்டவர்களுக்கு பரிசுகள் விழுந்திருக்கின்றன.

சந்தா நெம்பர்.

2659. Rajam Battachar, Chidambaram

375. T. Narasimhan, Chittoor.

மேற்கூறியவர்கள் தமக்கு வேண்டிய புத்தகங்களைத் தெரிவித்தால் அனுப்புகிறோம்.

அடுத்த சஞ்சிகை வெளியாவதற்குள் சேரும் சந்தா நேயர்களுக்கும் இதே மாதிரி இரண்டு பரிசுகள் கொடுக்கப்படும். பழைய சந்தாதாரர்கள் தங்களது சந்தா நம்பரை அவசியம் தெரிவிக்கக் கோருகிறோம்.

---

## ஸ்ரீமான்-வடுவூர் கே. துரைசாமி ஐயங்கார் எழுதியவை

| | ரூ. | அ. | | ரூ. | அ. | | ரூ. | அ. |
|---|---|---|---|---|---|---|---|---|
| பூர்ண சந்திரோதயம் 1,2,3,4 | 7 | 8 | கும்பகோணம் வக்கீல் 1,2 | 3 | 0 | வஸந்த மல்லிகா | 1 | 8 |
| மாயாவிநோதப் பரதேசி 1,2 | 5 | 0 | மேனகா 1,2 | 3 | 0 | வித்யாஸாகரம் | 1 | 4 |
| மதனகல்யாணி 1,2,3 | 4 | 8 | விலாஸவதி 1,2 | 3 | 0 | திவான் லொடபட சிங் பகதூர் | 0 | 12 |
| காளிங்கராயன் கோட்டை ரகசியம் 1,2 | 4 | 0 | பாலாமணி | 2 | 8 | மாணிக்க வாசகர் | 0 | 8 |
| | | | சௌந்தரகோகிலம் 1,2,3 | 6 | 0 | வஸந்தகோகிலம் | 1 | 0 |
| | | | கனகாம்புஜம் 1, 2, | 2 | 12 | மாயசுந்தரி | 0 | 12 |

வத்ஸா கம்பெனி,
திருவல்லிக்கேணி.

---

## "கிருஷிகன்"

ஓர் மாதாந்த விவசாயப் பத்திரிகை.

பத்திரிகாசிரியர்கள்:....

(1) ராவ்பஹதூர் ஜெ. செல்வரங்க ராஜு
பென்ஷண்ட் விவசாய டெப்டி டைரெக்டர்

(2) J. R. ரங்கராஜு

வருஷ சந்தா தபால் கூலி உள்பட ரூபாய் ஒன்றுதான்.

எல்லோரும் சுலபமாய் அறிந்து கொள்ளக்கூடிய எளிய நடையில் கிருஷிகருக்கு அனுகூலமுண்டாகக் கூடிய வழிகளை எடுத்துக் காட்டுவதிலும், கிருஷிகருக்கு ஏற்படும் சந்தேகங்களை நிவர்த்திப்பதிலும் "கிருஷிகனு"க்குச் சமானமான பத்திரிகை கிடையவே கிடையாதென்பது நிச்சயம்.

"கிருஷிகன்" பத்திரிகையானது சுயநலத்தைக் கருதாது விவசாய அபிவிருத்தியையும், அதன் மூலமாய் தேசக்ஷேமத்தையும் கருதி வெளிப்படுவதால் வருஷ சந்தா தபால் கூலி உள்பட ரூ ஒன்று வைக்கப்பட்டிருக்கிறது.

வி. பி. மூலமாய் அனுப்பினல் ரிஜிஸ்ட்ரேஷன் கூலி சேர்த்து ரூ 1-4-0 ஆகும். ஆகையால் உடனே ரூ. ஒன்று மணியார்டர் செய்து தங்கள் பேர்களைப் பதிவு செய்து பத்திரிகை பெற்றுக் கொள்ளுங்கள்.

மானேஜர் "கிருஷிகன்" ஆபீஸ்,
"ஜகந்நாதபாக்" சைதாப்பேட்டை, சென்னை.

**கெட்டி சாயம் ! உயர்ந்த உடை !! விலை நயம் !!!**

**உயர்தரமான பம்பாய் கெட்டிச் சாயமுள்ள**

# கலர் புடவைகள்

இவைகள் தினந்தோறும் தோய்த்து அணியத் தக்கவை. கெம்புரோஸ், ஆரஞ்சு, பச்சை, சாக்லேட் நிறங்களில் கிடைக்கும். பெண்மணிகளைத் திருப்திப்படுத்த பளபளப்பும் வசிகரத்தோற்றமும் கொண்ட இவ்வாடைகளை வாங்குதலே சரி.
அளவு 18 × $2\frac{3}{4}$ முழங்கள்.

**முதல் ரகம்** விலை ரூ. 5-8-0 **2-வது ரகம்** ரூ. 4-8-0 பூக்கொடிக்கரை நெய்து முந்தாணியில் பூவேலை செய்திருக்கும் உருப்படி 1-க்கு ரூ. 1-8-0 அதிகம்.

# ஜர்மன் சில்க் புடவைகள்

**சாதா :** மயில் கழுத்து, பொன் வண்டு, மேகவர்ணம், மாந்துளிர், பச்சை, அரக்கு, கருப்பு முதலிய எல்லாக் கலர்களிலும் கிடைக்கும். பெங்களூர் முந்தாணி போட்டது. கலர் கெடாதது. மனோகரமான மழமழப்பு. பளபளப்பு மாறாதது. ரம்மியமான தோற்றமுள்ளது. நேர்த்தியான நெசவு கொண்டது. நீடித்து நிற்பது. உறுதியானது.

18 × $2\frac{3}{4}$ முழங்கள் விலை ரூ. 11-8-0
ரவிக்கை துண்டு 1-க்கு 0-11-0

**கோட்டடி :** கரைகளில் பேட்டு வைத்து உடலில் பவழக் கொடி, தந்திக் கம்பி, டில்லி தர்பார் முதலிய தினுசுகள்

18 × $2\frac{3}{4}$ விலை ரூ. 12-8-0
ரவிக்கை 1 முழம் 0-12-0

மேற்படி பிளைன், கொட்டடி தினுசுகளில் ருத்திராக்ஷப் பேட்டு வைத்து தலைப்பிலும் ஜரிகை (கருக்காதது) வேலை செய்ய உருப்படி 1-க்கு 3-0-0 அதிகம்.

குறிப்பு.—உத்தம உடைகளுக்கு உத்தரவாதம். ஆகவே நல்ல சாக்குகளை இங்கேயே வாங்குங்கள். ஆர்டருடன் கால் பங்கு முன் பணமனுப்புக. தபால் கூலி வேறு.

ஒரே சமயத்தில் 100 ரூபாய் சாக்கு வாங்குபவற்கு 1 ரூபாய்க்கு 0-1-6 வீதம் குறைக்கப்படும்.

**ஸிட்டி நெசவுச் சாலை,**
65, அரமனைக்கார வீதி,
ஜி. டி. சென்னை.

ஏஜண்டுகள் தேவை.

# ராதாமணி

(இரண்டாம் பாகம்)

வை. மு. கோதைநாயகி அம்மாள்
எழுதியது.

பிரசுராலயம்:
"ஜகன்மோகினி" ஆபீஸ்,
26, தேரடித்தெரு,
திருவல்லிக்கேணி, சென்னை.

காபிரைட்]

## 9-வது அதிகாரம்.

### கற்பின் சோதனை—கணக்கிலா வேதனை

தணிகாசலத்தின் காலை இறுகப் பிடித்துக்கொண்ட கிழவி விடாமல் ஓயாது, "ஆ! கள்ளன்! கள்ளன்!! அப்பா! தணிகாசலம்! அம்மா! மரகதவல்லி! இன்னும் விழித்துக் கொள்ளவில்லையா! சீக்கிரம் எழுந்துவாருங்கள்; திருடன் என்கையில் பிடிபட்டிருக்கிறான். நான் கிழட்டுப் பிணம்; அவன் என் கைப்பிடியிலிருந்து தப்பித்துக் கொண்டு ஓடிவிடப் போகிறான். சீக்கிரம் வாருங்கள்! சீக்கிரம் வாருங்கள்!!" என்று பலமான சத்தம் போட்டுக் கூச்சலிடுகிறாள்.

நமது தணிகாசலத்திற்கோ இன்னதென்று விவரிக்க வியலாத பரமசங்கடமும்,நடுக்கமும் தோன்றி அவனை வதைத்துக்கொண்டேயிருக்கின்றன. அன்று நடந்துள்ள விபரீதமான செய்திகளும், அவனது மூடத்தன்மையினால் நேர்ந்துவிட்ட அதி பயங்கரமான செய்கையும் ஒன்றன்பின்னொன்றாய் நாடகக் காட்சிபோல அவனுடைய கண்களின்முன் தோன்றியதனால் அபாரமான குழப்பமும்,மனத்தளர்ச்சியு முண்டாய்க் கட்டுமீறிக் கலங்கச் செய்கின்றன. அவன் எந்தத் திக்கை நோக்கினாலும் அத்திக்கெல்லாம் மரகதத்தின் உருவம் தோன்றித் தன்னை இடித்து இடித்துக் காட்டுவது போலத் தோன்றுவதால் திடும் திடும் என்று திடுக்கிட்டுத் துடிக்கின்றான். "ஆகா! மரகதவல்லி எங்கு என்னவிதமான நிலைமையிலிருக்கிறாளோ!" என்று எண்ணும்போதெல்லாம் அவன் மார்பில் பீரங்கிக்குண்டு பாய்ந்ததுபோலான பரம இம்சையுண்டாகி அவனுடைய சப்தநாடிகளும் சோர்ந்து வெலவெலத்து அவனது தேகம் அயர்ந்து ஸ்மரணையற்றுப் போய்விடுகின்றது. அவனுடைய மார்பில் வியர்வையோ காட்டாற்று வெள்ளம்போல வடிகின்றது. இத்தகைய ஆபத்தான நிலைமையில் அவன், தனது மதியீனத்தை எண்ணி வருந்தியபடியே தன் காதல் கனியைத் தேடிக்கொண்டு வருங்காலையில் காலனை திடும்பிரவேசமாகத் தன் காலைப்பிடித்துக்

கொண்டதுபோல கிழவி தனது காலே, யானையின் பலத்துடன் இறுகப் பிடித்துக்கொண்டதும், எதிர்பாராது நேர்ந்த அந்த விபரீத மான செய்கையினால் சர்ப்பத்தை மிதித்தவன்போலத் துள்ளிக் குதித்துத் தாண்டவமாடுகின்றான். ஏற்கெனவே அன்று நடந்துள்ள விஷயங்களினால் அவனது மனமும், தேகமும் கேவலமான நிலைமை யில் உளுத்துப்போய் அவன் நடைச் சவம்போல ஆகிவிட்டமையால், இந்தச்சம்பவத்தினால் அவனுடைய உயிர்பெரும்பாகமும் நீங்கிவிட்ட தென்றே கூறவேண்டும். கிழவி சத்தமிடுவதனாலும், அதே தருணம் வீதிக்கதவை யாரோ பலமாகத் தட்டுவதனாலும் அவனுடைய நிலை முற்றிலும் தடுமாற்றத்தை யடைந்து, அவன் இன்னது சொல்வது, செய்வது என்பதை யறியாது ப்ரமிப்படைந்து கல்லாய்ச் சமைந்து விட்டான். எனினும் தனது சுய உணர்வை வருவித்தவனாய்த் தன் காலை விடுவிக்கத் திமிறுகிறான். மனோவேதனையினால் வெலவெலத்து விட்ட அவனது அங்கங்கள் கட்டுத் தளர்ந்து, அயர்ந்து, நடுக்கலுற்று இருப்பதால் கிழவியின் பலமான பிடியினின்றும் விடுபட எவ் வளவோ திமிறியும் அவனால் விடுவித்துக்கொள்ள சாத்யமின்றி அவன் தேகம் சோர்ந்து போகின்றது. என்ன செய்வான் பாவம்!

"ஆகா! களங்கமற்ற கற்புடைய எனதாருயிராகிய மரகதவல்லியைக் கன்னெஞ்சுடன் கபடமாகச் சோதித்ததின் பலனிதுவோ! மரகத வல்லியின் கண்ணீரை ஆறாகப் பெருகவிட்ட என்னை அக்கண்ணீரே வீராவேசமாக மாறிக் கிழவியினுள் புகுந்துகொண்டு என் காலைப் பற்றிக்கொண்டதோ! இன்னும், அவள் கண்களிலிருந்து கண்ணீர் சங்கிலிபோல சரமாக விழுந்த தருணம், அந்நீரானது அவளை நோக்கி, 'ஏ மாதே! நானே சென்று சங்கிலியாகமாறிக் கிழவியின் விரலாக அமைந்து அவன் காலைப்பற்றி இழுத்து, அவனது சங்கை யையும், உனது கிலியையும் நொடியில் நீக்குகிறேன்.' என்று சொல்லி வந்து போட்டியிட்டுக்கொண்டு விலங்குபோல எனது காலைப் பற்றிக்கொண்டதோ? ஆகா! கஜராஜனின் காலைக் கவ்விய முதலை யின் பலத்தைப் போலல்லவா இக்கிழவிக்குத் திடீரென இத்துணை பலம் வந்து, இவள் என் காலை இறுக்கிப் பிடித்துக் கொண்டுவிட் டாள்! ஐயோ! நான்தான் தணிகாசலம் என்று கூறுவதற்கும், என் முகத்தைக் காட்டுவதற்கும் ஏதுவில்லாமலிருக்கின்றதே; எனது

வார்த்தையை அவளது செவியில் ஏறவிடாது வீதிக்கதவை யாரோ பலமாகத் தட்டுகிறார்கள்; இவள் எனது முகத்தைப் பார்த்துத் தெரிந்து கொள்ளமுடியாது எனது மாறுவேடம் அதற்கிடையூறுயிருக்கின்றதே! அதோடு விளக்கும் காற்றினால் அவிந்துவிட்டதே! என்ன செய்வேன்?" என்று தவித்துத் தத்தளித்துக் கொண்டே காலை உதறி உதறிப்பார்க்கிறான். கிழவி தன் கைப்பிடியினின்றும் விடுவதாகத் தோன்றவில்லை. பின்னர் அவன் தனது கையிலிருந்த விளக்கைத் தடாலென்று கீழேபோட்டுவிட்டுத் தனது கரத்தினால் கிழவியை அலாக்காகத் தூக்க முயன்றவாறு, 'பாட்டி! கத்தாதே; கத்தாதே! நான் தணிகாசலம்' என்றான். இந்த எதிர்பாராத சம்பவத்தைக் கண்ட கிழவி அவன் சொன்னதைக் கவனியாமல் முன்னிலுமதிகரித்த பலத்துடனும், அண்டத்தை யளாவும் தொண்டையுடனும், அண்டினோர் செவியில் குண்டு பாய்ந்து அதைத் துண்டுபடச் செய்யும் வண்ணமாகவும், "ஐயோ! ஐயோ!! கொலை! கொலை!! திருடன் எனது மென்னியைப் பிடித்துக் கொல்லப் பார்க்கிறான்! கதவைத் தட்டுபவர் கூரையின் பக்கம் ஏறிக்குதித்து வாருங்களேன்; கிழட்டுப் பிணமாகிய என்னையே கொலைசெய்யத் துணிபவன் எனது குழந்தைகளை என்ன செய்துவிட்டானோ! இத்துணை கூச்சலுக்கும் அவர்கள் எழுந்துவராததை நினைக்க எனக்கு பயமாக விருக்கிறதே!" என்று கூச்சலிட்ட வண்ணம் முன்னிலுமதிகமாக அவன் காலைக் கெட்டியாகப் பிடித்துக் கொண்டாள்.

தணிகாசலம் கூறிய வார்த்தை இவள் செவியில் சிறிதும் ஏறவில்லை. அவனுடைய காலைப்பிடித்துள்ள கையை வாங்காமலே உடம்பை அப்புறமிப்புறம் புரட்டித் திருப்பி அவன் கைக்கு அகப்படாது நெளிகின்றாள். கிழவியின் வார்த்தையைக் கேட்ட தணிகாசலம் அவள் வாயைக் கெட்டியாக மூடப் போனான். கிழவி திடீரென்று அவன் கை விரலை வெடுக்கென்று, செலவு பெற்றுக் கொண்டவை போக மிச்ச முள்ள பற்களினால் கடித்துவிட்டாள். அதனால் அவன் விரலில் சதை பிய்க்கப்பட்டு இரத்தம் வந்துவிட்டது. அதை அவள் வாயில் சொட்டிய இரத்தத்தின் சுவையினின்றும் உணர்ந்துகொண்டாள். அப்போதும் தணிகாசலம்

விடாமல், தனது கை வலியையும் கவனிக்காது கிழவியின் இருகக்கத்திலும் வெகு ஆத்திரத்துடன் கையைக் கொடுத்து அவளை ஒரே தூக்காகத் தூக்கினன். அப்போதும் கிழவி பலத்த கூச்சலுடனே அவன் காலைப் பிடித்த பிடியை மட்டும் விடாது அவன் காலுடன் தூக்கப்பட்டாள். அவ்வாறு கிழவியைத் தூக்கிய சமயம் அவள் அவனுடைய காலுடன் எழும்பியதால் பூமியில் கால் பாவாமல் கிழவியுடன் தணிகாசலம் பொத்தென்று விழுந்தான். எனினும், அடுத்த சமயம் அவன் வெகு சாமர்த்தியமாய் எழுந்து தனது முண்டாசை இழுத்து அதன் ஒரு பாகத்தைக் கிழவியின் வாயில் வைத்து அடைத்து விட்டான்.

வாயில் துணி திணிக்கப்பட்ட கிழவி அதற்குமேல் கூச்சலிட மாட்டாது திணறினள்.எனினும் தணிகாசலத்தின் காலை மட்டும் விட்டபாடில்லை. தணிகாசலத்திற்கோ, "இவள் கூச்சலைக் கேட்டு யாரேனும் வந்துவிட்டால் நமது விபரீதச் செய்தி எவ்விதத்திலேனும் வெளிவர நேர்ந்துவிடும். அதனுல் பிறகு நமக்குப் பெருத்த ஆபத்து நேருவது திண்ணம். இதற்குள் நாம் எவ்விதமான தந்திரமேனும் செய்து இவ்வாபத்தினின்றும் விடுபட வேண்டும்" என்ற நோக்கமே அவன் மனத்தில் குடிகொண்டிருந்தமையால், அவன் முதலில் தான் செய்வது பாவ மென்பதையும் எண்ணுமல் துணியை வாயில் திணித்துவிட்டு அவளுடைய இரு கரங்களையும் பலமாக இழுத்தபடியே, "பாட்டி! பயப்படாதே; என் காலை விடு; நான் திருடனல்ல, உனது பேரப் பிள்ளையாகிய தணிகாசலம் தான்; வீணுகக் கூச்சலிட்டு விகாரப் படுத்திவிட்டாயே! செய்தியைச் சொல்லுகிறேன். கையை எடு" என்று அவள் செவியருகில் வாயை வைத்துக் கூறினன்.

கிழவி அப்போது அடைந்திருந்த மனக் கலக்கத்தினுலும், திடீரென வாயில் துணி யடைக்கப்பட்ட பாதையினுலும் அவஸ்தைப் பட்டுக்கொண்டிருந்த அச்சமயத்தில் தணிகாசலம் பணிவாகக் கூறியது அவள் காதில் பட்டதும், அக் கிழவி அதை முற்றிலும் மோசடியான வார்த்தை என்றும், திருடன் தப்பி

யோட அவ்விதம் சொல்வதாகவுமே நிச்சயித்துக் கொண்டாள். அவளது கரமென்னவோ தணிகாசலத்தின் காலை விட்டபாடில்லை. எனினும் கூச்சலிடவோ அவளுக்கு வாயில்லை. வெளியிலுள்ளவர்கள் வீதிக் கதவை இடிக்கும் இடியில் கதவு உடைந்து விடும் நிலைமையில் வந்துவிட்டது. அவ்வீட்டிற்கு முற்றத்தில் இரும்புக் கிராதியமைத்துள்ளபடியால் யாரும் குதித்து உள்ளேயும் இறங்கி வரமுடியாது.

OFFICE OF THE REGISTRAR 7 AUG 1928

அதன்மேல் தணிகாசலம் மெல்ல தனது சாமர்த்தியத்தால் கிழவியின் கையைத் திமிறித் தள்ளிப் பகீரதப் பிரயத்தினத்தால் காலை உதறி வெளிப்படுத்திக்கொண்டு பின்புறம் ஓடோடிச் சென்று தனது வேஷத்தைக் களைந்து விட்டு விளக்கைப் பொருத்திக் கொண்டு கிழவி யருகில் வந்து, "பாட்டி! நான் யார் என்பது இப்போது தெரிகிறதா? தற்போது நாம் அதிகம் பேச நேரமில்லை. மறுபடியும் கத்தாதே; நான் சொல்வதைக் கேட்டு அவ்விதமே நீ நடக்கவேண்டும். விஷயங்களைப் பின்னர்த் தெரிவிக்கின்றேன்; தற்சமயம் நீ சுத்த பயித்தியம் பிடித்தவள்போல நடித்தாலன்றி நாம் நாணயமாயும்,கௌரவமாயும் தப்ப முடியாது" என்று கூறியபடியே அவள் வாயிலடைத்த துணியை எடுத்துவிட்டு, "பாட்டி! நீ முன் கத்தியது போலவே உன்இஷ்டப்படி கூச்சலிட்டுக்கொண்டே இரு" என்று கூறிவிட்டுத் தான் மெல்லச் சென்று வீதிக் கதவைத் திறந்து தாளைப் பிடித்துக்கொண்டபடியே, "என்ன கூச்சலிது! இங்கு ஒன்றும் விசேஷம் நடக்கவில்லையே! அப்படி யிருக்க,இதென்ன அமர்க்களம்! வீட்டில் எனது பாட்டிக்குச் சில தினங்களாக ஏதோ ஒரு மாதிரியான பைத்திய வியாதி தோன்றியிருக்கிறது. அதனால் அவள் திடீர் திடீர் என்று கத்துகிறாள்; கோவெனக் கதறிப் புலம்புகிறாள்; அதோ பாருங்கள்; கூச்சலிட்டுக்கொண்டே யிருக்கிறாள். நான் இன்று ஓர் சினேகிதர் வீட்டிற்குச் சென்று சுமார் 11மணிக்குத் தான் திரும்பிவந்தேன்; வந்து பின்கட்டு மெத்தையில் படுத்துக் கொண்டேன். அலுப்பினால் அப்படியே அயர்ந்து தூங்கிவிட்டேன். இவள் போட்ட சத்தம் வெகுநேரம் வரையில் எனக்குக் கேட்கவில்லை. பின்னர்த் திடீரென விழித்துக் கொண்டேன். இங்கு

நடக்கும் உங்களுடைய அமர்க்களமும், கிழவியின் கூச்சலும் கேட்டவுடனே நான் விளக்குடன் ஓடிவந்தேன்; ஒன்றுமில்லை; பயப்படாதீர்கள்; வேண்டுமானால் உள்ளே வந்துபார்த்துவிட்டுப் போங்கள்'' என்று கூறினான்.

இந்த வார்த்தைகளை முற்றும் நம்பிய அந்த மனிதர்கள் திடு திடு என்று உள்ளே வந்தார்கள். கிழவிக்கோ தணிகாசலம் கூறியது இன்னதென்று விளங்காவிடினும். தான் பயித்தியம் பிடித்தவள் போல நடிக்காவிட்டால் பெருத்த அபாயம் நேரும் என்று கூறியது மிகுந்த குழப்பத்தையும், கலவரத்தையும் உண்டாக்கிவிட்டது. தான் அவ்விதம் செய்யாவிடில் தனது பேரனுக்குப் பெரிய விபத்து நேரும் என்ற பயத்தினால் அவன் கூறியபடியே, "ஆ! அதோ திருடன்! திருடன்!! பிடியுங்கள்; பிடியுங்கள்!'' என்று முன்போலவே கத்திக்கொண்டிருக்கிறாள். உள்ளே வந்தவர்கள் கிழவி கூச்சலிடுவதைக் கண்டதும் தணிகாசலம் கூறியது உண்மை தான் என்று நம்பியவர்களாய், "ஏன் சார் இவ்விதம் வந்து விட்டது?'' என்றார்கள்.

தணிகாசலம்:—"ஐயோ! அதை நம்மா லறிதல் கூடுமோ! சிலதினங்களாகச் சிற்சில சமயங்களிலேதான் இவள் இவ்விதமான கோர சத்தம் போடுகிறாள். ஒரு சமயம், 'ஆ! அதோ எமன் வந்து விட்டான்' என்று பெருத்த அமர்க்களம் செய்கிறாள்; ஒரு சமயம், 'அதோ ராஜா ஜார்ஜ் வந்திருக்கிறார்; எல்லோரும் வாருங்கள்;' என்று கத்துவாள்; திடுதிடு என்று ஓடுவாள்; தானாகக் கும்மி யடிப் பாள்; ஓ வென்று சத்தமிட்டுப் பாடுவாள். அந்த உபத்திரவத்தைச் சகிக்க வியலாது. வெளியாரறிந்தால் வெட்கக்கேடென்று நாங்கள் சமாதானம் செய்து இவளை அடக்கி அடக்கி வைத்துவந்தோம். இன்று ஊரைக் கூட்டிவைத்துவிட்டாள்'' என்று பெருத்த கயிறு திரித்து விட்டான். அங்குக் கூடியிருந்த ஜனங்களில் ஒருவன் கிழவியை நோக்கி, "பாட்டி! திருடன் வந்து உன் தலையை மொட்டை யடித்துவிட்டானே! தலையில் மயிரைக் காணவில்லையே! ஐயையோ! பாட்டி! மூக்கு அறுபட்டுப் போயிற்றே! புலாக்கு எங்கே?'' என்று பரிகசித்துச் சிரித்தான்.

இதைக் கேட்ட கிழவிக்கு உள்ளுக்குள் விசன மிருப்பினும் வேளைக்கும், வேஷத்திற்கும் தகுந்தவாறு நடிப்பதை விடாது வெகு துணிவுடன், "அத்து படுவாப் பயலே! கம்மனாட்டி மகனே! முண்டை மகன்களா! என் தலைமயிரை ஏன் மொட்டையடிக்கிறான்? அவன் ஆத்தா, பாட்டி தலையைச் சிரைக்கட்டும். இத்தனை பேரும் நிற்பதைப் பார்த்தால் எனக்குக் கும்மியடிக்க ஆசையாயிருக்கிறது; வாருங்களடா! பாவி மகன்களா" என்று கூறியபடியே தடபுடலாக எழுந்து சுற்றிக் கும்மி யடிக்கத் தயாராகக் கையைக் கொட்டிக்கொண்டு, "மூக்கறுத்தான் பெயர் என்னடா? மூக்கறுத்தான் பெயர் லக்ஷ்மணன்டா; கண்ணறுத்தான் பெயர் என்னடா? கண்ணறுத்தான் பெயர் ராமனடா" என்று அலங்காரக் கும்மிப் பாட்டுப் பாடத் தலைப்பட்டுவிட்டாள். இதற்குள் தணிகாசலம் கிழவியைத் தடுப்பது போலச் சென்று, "பாட்டி! இதென்ன இது? பிறகு போலீஸ்காரன் உன்னைப் பிடித்துக்கொள்வான்; போய் ஓர் மூலையில் படுத்துக்கொள்" என்று அதட்டி அவளை இழுத்து ஒரு பக்கம் படுக்கவைத்தான். அங்கிருந்த ஏனையோரும் இந்த நாடகத்தைப் பார்த்து நகைத்துக்கொண்டே, "ஐயோ! இத்துணை நேரம் கிழவி செய்த கூக்குரலைக் கேட்ட நாம் இங்கு ஏதோ கொலை நடந்துவிட்டதென்று தீர்மானித்துக் கதவை இடித்தோம்; கடைசியில் விளையாட்டாகவல்லவாமுடிந்தது!" என்று கூறிக்கொண்டே போய்விட்டார்கள்.

தலை மீதிருந்த ஒரு பெரிய மலை இறங்கியது போலவும், மிகுந்த மழை பெய்து நின்றாற் போலவும் அவர்கள் சென்றது தணிகாசலத்திற்குத் தோன்றியது. உடனே வீதிக் கதவைத் தாளிட்டுக்கொண்டு அவன் கிழவி யருகில் வந்தான். இதற்குள் கிழவி ஆத்திரத்துடன் தணிகாசலத்தின் கையைப் பிடித்துக்கொண்டு, "என்னடா! தணிகாசலம்! நீ கூறிய தொன்றும் எனக்கு விளங்கவில்லை; எனக்கு உத்திரவிட்டபடி நான் சரியாக நடித்துவிட்டேன். ஏதோ விஷயம் பின்னால் தெரிவிப்பதாகக் கூறினாயே! அதென்ன? இத்துணைக் கலவரத்திலும் மரகதத்தைக் காணவில்லையே! என்ன செய்தி? அவள் எங்கே? அவள் [illegible]னமாக



18284

இவ்விதம் நித்திரை செய்ய மாட்டாளே; விஷயமென்ன விளம்பு. என் மனம் பதைக்கின்றது; என்ன ஆபத்து உனக்கு நேரவிருந்தது?" என்று பலவிஷயங்களை ஒன்றன்பின் ஒன்றாகக் கேட்டாள்.

இதைக்கேட்ட தணிகாசலம் மிகுந்த விசனத்தை யடைந்தவனாய், தான் செய்த அனியாயத்தை எவ்விதம் கூறுவது என்று யோசிக்கின்றான். கூறுவிடிலோ மரகதவல்லியைக் காணாத செய்தி அண்டையயலுக்குத் தெரிந்துவிடும் என்ற பயமும் ஒருபுறம் அவனை பாதிக்கின்றது. இந்நிலையில் அவன் மெல்லவுமாட்டாது சொல்லவு மாட்டாது தவித்தான். பின்னர் ஒருவாறு மனதைத் தேற்றிக் கொண்டு பேசத் தொடங்கி, "பாட்டி! நமக்குத் தற்போது பெருத்த கஷ்டகாலமும், மீளாத துயரமும், மாளாத சங்கடமும், மானம்போகும் ஆபத்தும் நேர்ந்துவிட்டன. இவற்றிற் கெல்லாம் காரணம் மாபாவியாகியயானே" என்று முதல்நாள் முதல் தங்கள்இரு வருக்கும் நடந்த சகல விஷயங்களையும் சுருக்கமாகக் கூறி முடித்துப் பின்னர், "பாட்டீ! கத்தாதே! கத்தாதே; இவ்விஷயத்தை யாரும் அறியலாகாது; பிறரறிந்துவிட்டால் நமது தலை போய்விடும். வெளியில் மூச்சுவிடாதே!" என்றான். இவ்வாறு அவன் கூறி முடிக்கு முன் கிழவி, தாங்கவியலாத துயரம் மேலிட்டவளாய், "ஆ! ஐயோ! என்னருமை மரகதவல்லியையா நீ சோதித்தாய்? மாசிலா மரகத மணியையா நீ இவ்வித கோலத்திற் குள்ளாக்கினாய்! சுடர்விட் டெரியும் நெருப்பாகிய அவ்வுத்தம ரத்தினத்தையா நீ ஆராய்ச்சி செய்தாய்? ஐயோ! அனியாயமே! நாசமாய்ப்போன படுபாவி எவனோ உளறியதையும், அகஸ்மாத்தாய் நடக்கும் விஷயத்தையும் ஒத்திட்டுப் பார்த்து நீ இவ்விதமான விபரீதச் செய்கையைச் செய்யலாமா! அடே தணிகாசலம்! நீ செய்த செய்கையானது அடியோடு மோசம்போகும் வண்ணம் முடிந்துவிட்டதே! அடா அடா! மூடாகனே! உன் படிப்பு பாழாய்ப்போக. நீ இதுகாறும் அவளுடன் பழகி அவளுடைய இயற்கையை யறிந்த பாதகனல்லவா? அப்படியிருந்தும் அவளுடைய குணத்தையும், நடத்தையையும் அறியாமல் மூடனாய்ப் போய்விட்டாய். உனக்குத்தான் அவள் குணம் தெரியவில்லை; நீ மூடத்தனமும், முன் கோபமும்,

ஆத்திரமும் கொண்டு மகா உத்தமியாகிய அவள் மீது வீணைகச் சந்தேகங் கொண்டாய்; அவ்வாறு ஐயங்கொண்டாலும் அதன் உண்மையை அறிய, கோட்டான்போல வயதாகி, யாவற்றையும் நன்கறிந்து, கூனிபோல உட்கார்ந்திருக்கும் கிழட்டுப்பிணம்—வெகு நாளைய ஜாம்புவானுகிய என்னிடம் அதைப் பற்றிக் கேட்கலாகாதா! ஐயோ! பாவமே! வெகுநற்குணமுள்ள பக்கத்து வீட்டுப் பாலாமணியோடு அவள் சினேகங் கொண்டிருந்ததை இத்துணை நாளாக நீ யறியாயா? இன்று ஏன் இவ்வித விபரீதமாக நினைத்தாய்? நேற்று அவள் கடிதம் எழுதியதை நானும் பார்த்துக்கொண்டு தானேயிருந்தேன். பிறருக்கு உபகாரம் செய்வதால் தப்பிதம் யாது? நேற்றுப் பாலாமணி வழக்கம்போல வந்து கேட்டுக்கொண்டதன் பேரிலல்லவா அவள் கடிதம் எழுத ஒப்புக்கொண்டாள்; எல்லாம் நானறிந்த செய்தியாயிற்றே; இன்று பாலாமணி கடிதம் படித்தபோதும் சாமானறையில் நான் உட்கார்ந்து கேட்டுக்கொண்டிருந்தேனே! அட கெடுமதியுள்ள பாதகனே! உனது குணம் திடீரென்று இவ்விதம் மாறியது இத்தகைய காலம் வருவதற்குத் தானே! ஐயோ! நீ என் மரகதத்தை இழந்துவிட்டாயா! இத்துணை தூரம் நடந்துவிட்ட பிறகு இச்செய்தியை என்னிடம் எதற்குத் தெரிவிக்கவேண்டும்? ஹா! அவளது உறுதியான மொழிப்படி அவள் உயிரைத் துறந்தே யிருப்பாளே! ஐயோ! நான் என்ன செய்வேன்? வயிறும் பிள்ளையுமாக அவளழகைத் தினம் கண்டு மகிழ்ந்தவாறு ஆகாயக் கோட்டை கட்டிக்கொண்டே யிருந்தேனே! பாவி என் எண்ணத்தில் ஈசன் மண்ணைப்போட்டு நான் ஓயாது கண்ணீர்விட்டுக் கதறும்படி பண்ணிவிட்டானே! வீட்டிற்குக் குழந்தை பிறக்கப்போகிறதென்கிற குதூகலத்தில் மூழ்கி நான் மெய் மறந்திருந்தேனே! ஐயோ! அநியாயமே! கர்ப்பிணி என்பதையும் பாராது நீ இவ்விதம் விபரீதப்படுத்திக் கொலையும் செய்து விட்டாயே! இந்த பாபத்தை எத்தனை ஜன்மமெடுத்துத் தீர்த்தாலும் இது தீராதே! ஆ! என் செல்வமே! மரகதவல்லி! மரகதவல்லி!'' என்று வயிற்றெரிச்சல் அபாரமாகப் பொங்கி எழ, சகிக்கக் கூடாததான மனக்கொதிப்புடன் கூறிப் புலம்புகின்றாள்.

ஏற்கெனவே இடிந்துபோய் வாதைப் பட்டுக்கொண்டிருக்கும் தணிகாசலத்திற்குக் கிழவி கூறும் ஒவ்வொரு வார்த்தையும் கூரிய

ஈட்டி மார்பினில் பாய்வதுபோல பரமவேதனையைச் செய்வதால் அவன்,மேலும் தாளமுடியாத மனத்துயரடைந்தான். அவன் செய்து விட்ட செய்கையே அவனைக் கொன்றுகொண்டே யிருக்கிறது. இவ்வாறு அடக்கமுடியாததுயரம்மேலிட்டதனால் அவன் சிறியகுழந்தையைப்போல விம்மிப் புலம்புகிறானே யன்றிக் கிழவியை அடக்கவோ, எழுந்து செல்லவோ அவனால் சாத்யமில்லை. அவனுடைய சர்வாங்கமும் அசைவற்று ஓய்ந்து விழுந்துவிட்டது. இந்நிலைமையில் கிழவி தணிகாசலத்தை நோக்கி, "ஐயையோ! அக்ரமமே! நீ செய்வதை யெல்லாம் செய்துவிட்டு இன்னும் உட்கார்ந்து முண்டைச்சி போல புலம்புகிறாயே! உன்னால் கூடிய வரையில் எங்காகிலும் தேடலாகாதா? எழுந்திரே" என்று கூறினாள்.

உடனே தணிகாசலம், தன்னுணர்வைப் பெற்றவனாய் எழுந்து அவ்வீடு பூராவும் தேடினான்; அவனுக்குத் தண்ணீரில் நன்றாக நீந்தவும், முழுகவும் தெரியுமாதலால் ஓசையின்றிக் கிணற்றில் இறங்கி முழுகிப் பார்த்தான்; அங்கு அவள் இல்லையென அறிந்து மிகவும் வருந்தியவாறு மேலேறிக் கிழவியை நோக்கி, "பாட்டி! கதவைத் தாளிட்டுக்கொள்; நான் வெளியில் சென்று குளங்கள் முதலிய இடங்களில் பார்த்துவிட்டு வருகிறேன்" என்று கூறிவிட்டு வெளியே சென்றான். கிழவியோ அளவிலடங்காத துக்கத்திலாழ்ந்து புலம்பிக்கொண்டே யிருக்கிறாள். தணிகாசலம் தடதடவென்று நேரே அவ்வூரருகிலுள்ள குளத்தை யடைந்து கரை முதலிய விடங்களில் பார்த்தான். எங்கும் ஒருவித அடையாளமும் காணப்படவில்லை. அக்குளத்தைச் சுற்றிலும் சப்பாத்தியும், இதர செடிகளுமே நிறைந்திருந்தன; இருபுறங்களில் மட்டும் இறங்குவதற்கான படித்துறைகள் அமைக்கப் பட்டிருந்தன. "இந்தக் குளத்தில் அவள் விழுந்திருந்தால் இந்த இரண்டு துறைகளினருகில் தானே இருக்கவேண்டும்" என்று தணிகாசலம் தீர்மானித்தவனாய் தனது உடையைக்களைந்து கரைமீது வைத்துவிட்டுக் குளத்தில் இறங்கி அவனால் கூடியமட்டும் நீந்தி முழுகி இருபக்கமும் பார்த்தான்; எங்கும் அந்த மின்னாளைக் காணவில்லை. என்ன செய்வான் பாவம்! கரை ஏறி உடையணிந்துகொண்டு பின் அவ்வூருக்குச்

சற்று தூரத்திலுள்ள குளத்திற்குச் சென்று அங்கும் அவ்விதமே தேடிப்பார்த்தான். அவள் எங்கும் காணப்படவில்லை. தணிகாசலத்தின் துயரமோ கரைகாணுதபடி பொங்கிஎழுகின்றது. அதனுல் அவன், "ஐயோ! என் கண்மணி! பாவியானே உனக்குக் காலனுகத் தோன்றிவிட்டேனே! வயல்களுள்ள பக்கம் எங்குப் பார்த்தாலும் கிணறுகளும், பெரிய துரவுகளும் நிறைந்திருக்கின்றனவே! நீ அவைகளில் எதிலேனும் விழுந்து உனது உயிரை மாய்த்துக்கொண்டாயோ! ஆ! எந்தவிடத்திலென்று உன்னை நான் தேடுவேன்? ஐயோ! மண்டையை உடைத்துக்கொண்டு நான் படித்த படிப்பெல்லாம் உன் விஷயத்தில் பாழாகிவிட்டதே! நான் சந்தேகமென்னும் பிசாசினிடத்தில் அடிமையாகி எனது கண்ணுக்குக் கண்ணுன கண்மணியை-விலையிலா மரகதமணியை-இழந்துவிட்டேனே! என்ன செய்வேன்? எங்குத் தேடுவேன்? ஹா! விதியே! பொழுது புலரும் தருணமுமாகிவிட்டதே! நான் எந்தவிடத்தில் என்று கண்டு தேடமுடியும்! ஐயோ! பாழும் சந்தேகத்திற்கு ஆளாகிவிட்டால் எந்த மனிதர்களும் இவ்வித துன்பத்தைத்தான் அடைய நேரிடுமோ! ஆகா! சுயபுத்தியின்றியும், உறுதியான எண்ணமின்றியும் என்னை நானே கெடுத்துக் கொண்டேனே! என் கண்மணி இந்தச் செய்தியை எக்காரணம் பற்றியும் பிறரிடம் அறிவிக்கலாகா தென்று உறுதியாகவும், சத்தியமாகவும் கேட்டுக் கொண் டிருக்கிருளே! அவளுக்கு நான் முற்றிலும் எமனுக நின்று அவளைக் கெடுத்ததோடு அவள் வேண்டுகோளை மறந்து இதையாரிடத்திலேனும் வெளியிடுவேனுனல் அது மகா பாதகமாகுமே; ஆதலின் இதை யாரிடம் வெளியிடுவேன்? என் வினையே என்னைத் தாக்கிவிட்டதோ? ஆகா! கர்ப்பிணி என்பதையும் நினையாது அவளைப்பரிபவம் செய்ததுடன், அவள் வயிறும், மார்பும், மனமும் அடிக்கும் வண்ணமாக, அச்சிசுவும் அவளுடைய சோர நாயகனுக்கு உற்பத்தியானது என்று துணிபுடன் எழுதிய இக்கரத்தைத் துண்டு செய்தாலும் அப் பாவம் தீராதே! நான் என்ன செய்வேன்? அவளுடைய பெற்றோர்கள் ஒருகால் அக்ஷராப்யாசத்திற்கு நேரில் அழைக்கவந்தால் நான் அவர்களுக்கு எவ்விதம் பதில் கூறுவேன்? அவர்களுடைய முகத்தில் எவ்விதம்

விழிப்பேன்! ஐயோ, கர்மமே! என்ன செய்வேன்?" என்று கலங்கி நடந்துகொண்டிருந்தான். அத்தருணம் நன்ருகப் பொழுது புலர்ந்துவிட்டது. அப்போதும் அவன் ஒவ்வொரு வீதியாகப் பார்த்துக்கொண்டே வீடு வந்துசேர்ந்தான்.

கிழவி, ஆத்திரத்தோடு, "ஆ! மரகதம் அகப்பட்டாளா?" என்று தணிகாசலத்தைக் கேட்டாள். அவன், 'இல்லை' என்ற பதிலுடன் உள்ளே வந்து, தடாலென்று விழுந்தான். அவனுக்கு ஒன்றுமே தோன்றவில்லை. அவன் தடுமாற்றமுள்ள சித்தத்துடனும், எண்ணரிய கவலையுடனும் புலம்புகிருன். அவ்வீடு அப்போதுள்ள நிலைமையில் இழவு விழுந்த வீடுபோலக் காணப் பட்டது. கிழவியொருபுறம் கலங்குகிருள். தணிகாசலம் ஒன்றும் பேசமுடியாமல் ஸ்தம்பம்போல அசைவற்றிருந்தான்.

கிழவி, தணிகாசலத்தி னருகில் வந்து, "ஏண்டாப்பா! தணிகாசலம்! இவ்விதம் புலம்பிக்கொண்டே படுத்திருப்பதால் என்ன பலனுண்டாகப்போகிறது? போலீஸிலாகிலும் இதைப்பற்றி எழுதிவைக்கப்படாதா? போலீஸ்காரர்கள் பல திக்குகளிலும் தேடினல் ஏதேனும் பலன் கிடைத்தாலும் கிடைக்கக்கூடுமே; வீணுகப் படுத்திருப்பதால் ஒரு பலனும் ஏற்படாதே" என்ருள்.

தணிகாசலம்:—"ஐயோ! சண்டாளனுகிய நான் செய்த சதி யெல்லாம் போதாதா! அந்த மின்னுள் எக்காரணத்தை முன்னிட்டும் இவ்விஷயத்தைப் பிறரறியும்படி செய்யலாகாதென்று பலதரம் என்னைக் கேட்டுக்கொண்டிருக்கிருளே! இதையேனும் நான் செய்யா விட்டால் மகா பாபியாவேன். மேலும் அவள் கூறியதை நான் தள்ளிவிட்டு இந்தத் தகவலைப் போலீஸுக்குத் தெரிவித்தால் அத ஞல் நமக்கு மிகுந்ததீங்கும், அவமானமும் முதலில் சம்பவிக்குமே; அவர்கள், 'என்ன காரணத்தினுல் வீட்டில் ஒத்து வாழ்ந்து கொண்டிருந்தவள் காணுமற் போனுள்? ஏதேனும் அவளுக்கு மனஸ்தாபமுண்டா?' என்பன போன்ற பல கேள்விகளைக் கேட்பார் களே; அதற்கு நான் என்ன பதில் சொல்லுவேன்? எனது வெட்கக்கேடான விஷயத்தை எவ்விதம் வெளியிடுவேன்? எந்த

வழியில் சென்றாலும் ஆபத்தாகவிருக்கிறதே! அவள் பெற்றோருக்கு இச்செய்தியை எவ்விதமுரைப்பது? ஒன்றுமே தோன்றவில்லையே?'' என்று வெகுநேரம் கலங்கிப் பின்னரும் இவ் விஷயத்தை வெளியா ரறியாவண்ணமாகவே இரகசியமாக வைத்துக் கொண்டு அவ்வூரிலுள்ள கிணறுகள், குளங்கள், வீதிகள் முதலிய விடங்களிலெல்லாம் அலைந்து திரிந்து 5-6-நாட்கள் வரையில் சுற்றிப் பார்த்தான். எங்கும் ஒன்றும் புலப்படவில்லை. முடிவில் அவன் இதே விசாரத்தினல் பலமான காய்ச்சல் கண்டு நடுக்கமுற்று ப்ரக்ஞை யற்றுப் படுத்துவிட்டான். கிழவியோ துடிக்கின்றாள் பாவம்! அவனுடைய கக்ஷிக்காரர்கள் வந்து அவனைப் பார்த்து வைத்தியரைக் கொண்டு அவனுக்குச் சிகிச்சை செய்யத் தொடங்கினர்கள்.

தணிகாசலம் சுய நினைவற்று ஏதேதோ பேசுவதும், பினத்துவதுமாய்விட்டான். "ஆகா! என் மாரகதவல்லி! உயிருடன் திரும்பி வருவாயா? எனது துயரத்தைப் போக்குவாயா? எனக்குத் தரிசனம் தருவாயா?'' என்று பலவாருகப் பிதற்றினன். இதை ஒரு கக்ஷிக்காரனும், வைத்தியனும் கவனித்தார்கள். அந்தக் கக்ஷிக்காரன் அடிக்கடி இவர்கள் வீட்டிற்கு வரக்கூடியவன்; அவனுக்கு மாரகதவல்லியை நன்ருகத் தெரியும். தணிகாசலம் படுத்த நாள் முதல் மரகதவல்லியைக் கண்ணில் காணுமையால் அவள் தனது பிறந்த அகத்திற்குச் சென்றிருக்கலாமென்று அவன் நினைத்தான். அப்படி நினைத்திருந்த அவன், தணிகாசலத்தினுடைய பிதற்றலைக் கேட்டதும் சற்று சம்சயங் கொண்டான். அதன்மேல் அவன், "அவள் தாய் வீடு சென்றிருந்தால் இவ்வளவு பலமான நோயுடனிருக்கும்போது இவன், அவளை வரவழைக்காதிருப்பானு! முன்னெரு முறை சாதாரண நோய் கண்டிருந்ததற்கே தந்தி கொடுத்து அவளை வரவழைத்தானே! அப்படிப்பட்ட இவன், இப்போது வரவழைக்காமலிருப்பதையும், பினத்துவதையும் கவனித்தால் விஷயம் விபரீதமாயிருப்பதாகத் தெரிகிறது. விவரம் ஒன்றும் விளங்கவில்லையே! யாரைக் கேட்டால் இதன் விவரம் தெரியும்? இவனே ப்ரக்ஞையற்றுக் கிடக்கின்றான். கிழவியோ

ஒரே துக்க சாகரத்தில் மூழ்கிக் கிடக்கிருள். இந்நிலேயில் இந்த விஷயத்தை எவ்வித மறிவது!'' என்று யோசித்தான். அப்போது அவனுக்கு ஓர் யோசனை தோன்றியது. அதாவது:—அவ்வீடு கூட்டியைக் கேட்டால் விஷயம் தெரியும் என்ற எண்ணமுண்டாயிற்று. அவ்வாறுண்டாகவே அவன், அவ்வீடு கூட்டியை அழைத்து, "குப்பாயி! உன்னிடம் நான் சில விஷயங்கள் கேட்டுத் தெரிந்து கொள்ளவேண்டும். நீ சற்றும் பயமின்றி அவற்றைச் சொல்லிவிடு; மறைக்காதே; அப்படிச் சொல்வதனுல் உனக்கு யாதொரு தொந்திரவு மில்லே. அதாவது:—இவ்வீட்டு எஜமானியம்மாள் எங்கே? அந்த அம்மாளின் விஷயம் உனக்குத் தெரியுமா? ஐயா படுத்திருப்பதைப் பார்த்தால் பயமாக விருக்கிறது; உடனே தந்தியடித்து அந்த அம்மாளே வரவழைக்கவேண்டும்; உனக்குத் தெரிந்தவற்றைக்கூறு'' என்றான்.

இதுகேட்ட குப்பாயி என்னும் வேலேக்காரி, "சாமி! எஜமானே! இந்த விசயம் என்னமோ எனக்கும் சந்தேவ மாத்தா ஈக்குது; 10 நாளா அம்மாளேக் காணலே! மவா லச்சிமி போல இருப்பாங்க. ராத்ரி நான் பத்து தேச்சுட்டு போவச்சிலே பாத்தேன். காலேங்காத்தாலே வரச்சிலே ஐயாவும், செய அம்மாவும் அயுதுகிட்டிருந்தாங்க. என்னன்னுக் கேட்டேன். சரியான ஜவாப் சொல்லல்லே. நான் என்னமோன்னு பூட்டேன். அப்பாரம் வூட்டுலே பத்து பாத்ரமே வுயலே; சமயலே ஆக்கலே; துண்ணலே; அம்மாளேயும் காணலே. நானும் உடாது அம்மா எங்கே காணலியே, அவங்க ஆத்தா வூட்டுக்குப் போயிருக்கராங்களான்னு கேட்டேன். அதுக்கு செயவி யம்மா ஆத்தா வூடு போவலே, வேறே யார் வூட்டுக்கோ கண்ணாளத்துக்குப் போயிருக்காங்கன்னு சொன்னுங்க. நீங்க ஏன் வெசனமாக்கிரங்கின்னு கேட்டேன்; அவங்க மனுசாளு யாரோ செத்துட்டாங்கன்னு சொன்னுங்க;மெய்யாலும் செத்தாக்கா சாவுக்கு போவாங்க; அதுவுமில்லே; அம்மாளும் இன்னும் வல்லே; அதிகமாக கேட்டாக்கா ஐயாவுக்கு கோவம் வந்துடுது. அத்தொட்டு நானும் சும்மா என்னதான் நடக்குது பாப்போன்னிக்கறேன். ஐயாவுக்கு ரொம்ப

வெசனமாக்கிது. என்ன செய்வானோ பகவான் தெரியலே!" என்றாள்.

அந்தக் கக்ஷிக்காரனாகிய பாஷியம் நாயுடு என்பவன் இந்தத் தகவலைக் கேட்டுத் தெரிந்து கொண்டபின், "சரி, இதுதான் கேட்டேன்; நான் சென்று வருகிறேன்" என்று கூறிவிட்டுக் கிழவியிடம் வந்தான். கிழவி ஆறாத் துயரத்தோடு புலம்பிக்கொண்டேயிருந்தாள். அத்தருணம் பாஷ்யம் கிழவியை நோக்கி, "பாட்டீ! உங்களை யொரு விஷயம் கேட்கவேண்டும். அதாவது:—மரகதவல்லியம்மாள், எங்கே காணவில்லையே! அவருடைய நிலைமையோ மிகவும் கவலைக்கிடமாக விருக்கிறது. தந்தி யடித்து அவர்களை வரவழைக்க வேண்டும். அவர்கள் எங்குச்சென்றிருக்கிறார்கள்? அதைத் தெரிவியுங்கள், இப்போதே நான் தந்தி யடிக்கிறேன். அவர் வாய் பிதற்றுவதைப் பார்த்தால் அந்தஅம்மாளுக்கு ஏதோ ஆபத்துநேர்ந்துவிட்டது போலவும், அந்த அம்மாள் இறந்துவிட்டதுபோலவும் நினைக்க இடமாயிருக்கிறது; உண்மையான செய்தி யாது? அதைக் கூறுங்கள்" என்றான்.

இது கேட்ட கிழவி அவ்விஷயத்தை யொருவருடனும் தெரிவிக்கலாகாதென்று தன் பேரன் கூறியிருந்தபடியால் அவ் விஷயங்களை விவரித்துக் கூறாமல், "ஐயோ! அவள் விலாசம் கொடுக்கக் கூடிய விதமான இடத்திற்குச் செல்லவில்லையே! வீட்டிலிருந்தவள் திடீரென்று காணாமற் போய் விட்டாளே" என்று கூறிப் புலம்பிய படியே மூர்ச்சையாகிவிட்டாள்.

இதைக்கண்ட பாஷ்யம் நாயுடு, "சரி; இங்கு ஏதோ பெரிய விபரீதம் நடந்திருக்கிறது. உடனே நாம் இத்தகவலை அவள் பெற்றோருக்குச் சுருக்கமாக அறிவிப்பது நலம். இவரோ கடுமையான சுரத்தில் படுத்திருக்கிறார். கிழமோ எப்பொழுது போய் விடுமோ என்று கருதக் கூடிய நிலைமையிலிருக்கிறது. அந்த அம்மாளின் செய்தியோ ஒன்றும் தெரியவில்லை. இதை இவ்விதமே விட்டுவிட்டால் பிறகு காரியம் எவ்விதம் முடியுமோ! அவள் வெறும் மனுஷியுமல்ல; கர்ப்பிணி. நாம் உடனே ஒருவருடைய யோசனை

யையும் எதிர் பாராது தந்தி யடித்துவிடுவோம்" என்று தீர்மானித்தவனாய் நேரே தபாலாபீஸுக்குச் சென்று,

"தங்கள் குமாரத்தி மரகதவல்லியின் உயிர் இருப்பதும் தெரியவில்லை; அவள் இறந்ததும் தெரியவில்லை. பெரிய தடபுடலாக இருக்கிறது ! உடனே வந்து பார்க்கவும்.

உண்மை நண்பன்"

என்று தந்தி யடித்துவிட்டு வீடு வந்தான்.

* * * *

4வது அதிகாரத்தின் கடைசியில் குறிப்பிட்டுள்ள தந்தி இது தான் என்பது வாசகர்களுக்கு விளங்கலாம்.

ருக்மிணியோ தந்தியை வீட்டில் பார்த்தவுடனேயே மூர்ச்சித்துவிட்டாள். பின்ராஜத்தினால் மூர்ச்சை தெளிவிக்கப்பட்டு எழுந்தாள். அவ்வாறு எழுந்ததும் புருஷனை நோக்கி, "ஆ! என் குழந்தை கர்ப்பவதியல்லவா? அவளை இனி யிங்கு அழைத்து வரவேண்டாமா வென்று நான் முட்டிக்கொண்டேனே! ஏதோ உபயோகமற்றதான விஷயத்தைக்கொண்டு தங்கமான மருமகப் பிள்ளையிடம் த்வேஷங் கொண்டு அவருக்குத் தாறுமாறான கடிதத்தை எழுதி, அவர் மனத்தைப் புண் பண்ணியதோடு நமது வீட்டு மங்கள காரியத்திற்கே நமது குழந்தை வராதிருக்கும் படியான காரியம் செய்துவிட்டீர்களே! இப்போதேனும் நேரில் சென்று அழைத்துவாருங்கள் என்று நான் வேண்டியதற்கும் மறுத்தீர்கள். அல்லது நானாவது குமாஸ்தாவுடன் சென்று குழந்தையை அழைத்துவருகிறேன் என்றதற்கு, 'அப்படிச்செய்தால் மறுபடி நீ வீட்டிற்கு வரக்கூடாது' என்று திட்டம் செய்தீர்களே; ஐயோ! எல்லாவற்றையும் பொறுத்துக்கொண்டு உங்களிஷ்டப் படி நடந்ததற்குப் பலனிதுவோ! ஆ! குழந்தை இருக்கிறாளோ, இறந்துவிட்டாளோ தெரியவில்லையே! ஒப்புக்காகிலும், 'நீங்கள் ஏன் வரவில்லை' என்று நான் அவர்களுக்குக் கடிதம் எழுதச் சொன்னேனே, அதையும் மறுத்தீர்களே; பின் உங்களுக்குத் தெரி

யாமல் ராஜத்தை விட்டுக் கடிதம் எழுதச் சொன்னேன். அவ்வாறே ராஜம் எழுதியதற்குப் பதிலே வரவில்லை. குழந்தையே தானாக ஒரு கடிதம் மிக்க சலிப்புடன் அக்ஷராப்யாசத்திற்கு முந்தி எழுதியிருந்தாள்; அதற்குப்பின் தகவலே கிடைக்கவில்லை; அதனால் வருந்திக் கொண்டிருந்த எனக்கு இத்தகையசெய்தியா முதலில் வரவேண்டும்! ஐயோ! மரகதவல்லி! எங்கள் வயிற்றில் பாலை வார்ப்பாயா? ஆ! என்ன செய்வேன்? இன்னமும் உங்கள் வர்மத்தை விடவில்லையா! இப்போதேனும் போய்க் குழந்தையைப் பார்க்கவேண்டாமா? தந்தியில் ஒரு தகவலும் சரியாகத் தெரியவில்லையே! உடம்புக்கு இன்ன நோய் சம்பவித்ததென்பது விவரமாக எழுதவில்லை. நமது குமாரத்தி உயிருடனிருப்பதும் தெரியவில்லை, இறந்ததும்தெரியவில்லை; நான் இதை என்னவென்று எண்ணுவது? ஐயோ! நாம் உடனே நம் வண்டியையே போட்டுக்கொண்டு புறப்பட்டுப் போய்ச் சேருவோமே; எழுந்திருங்களே'' என்று கதறியழுதாள்.

கண்ணபிரானுக்கும் மனத்தில் வருத்தம் அதிகரித்துவிட்டது. அவரால் தாள முடியவில்லை; அதன்மேல் அவர், "நாம் பிடிவாதமாகக் குழந்தையைப் பாராது வர்மம் பாராட்டி விட்டோமே! செய்தி தெற்றென விளங்காத விதமாகத் தந்தி வந்திருக்கிறதே! நாம் அங்குச் சென்று பார்க்குங்கால் என்ன விஷயம் காதில் விழுமோ! எவ்வித காக்ஷியைக் காண நேரிடுமோ! ஒன்றும் தெரியவில்லையே'' என்று வருந்தியவாறு பதில் பேசாது எழுந்து, தமது வண்டியைத் தயார் செய்யும்படி வேலைக்காரனிடம் சொன்னார். உடனே வண்டி தயாரானதும் ராஜத்தினிடம் வீட்டை ஜாக்ரதையாகப் பார்த்துக்கொள்ளும்படிக்கும், வீட்டில் துணைக்காகத் தமது உறவினர் யாரையேனும் அழைத்துவைத்துக் கொள்ளும் படிக்கும், ஊரில் சென்றதும் உள்ள விஷயத்தை எழுதுவதாகவும் கூறிவிட்டு, இருவரும் வண்டி ஏறிப் புறப்பட்டார்கள். "ஐயோ! செவியில் என்ன செய்தி எட்டுமோ!'' என்ற திகிலே இவர்கள் மனத்தில் எழுந்து போராடுகின்றது. இருவரும் வருத்த மேலீட்டால் ஒருவரோடொருவர் பேசாது மவுனமாகவே பிரயாணத்தை நடத்தி, தணிகாசலத்தின் வீடு வந்து சேர்ந்தார்கள்.

அவ்வீட்டின் வீதிக் கதவு தாளிடப்பட்டிருந்தது. அங்குச் சந்தடி என்பதே சிறிதுமின்றி நிச்சப்தமாயிருந்தது. அதைக்கண்டு அவர்கள் நடுங்கியவண்ணம் கதவை இடித்தார்கள். சற்றுநேரங் கழித்துக் கிழவியே வந்து கதவைத் திறந்தாள். வீதியில் இவர்களிருப்பதைக்கண்டதும் கிழவி நாகத்தை மிதித்தவள்போல நடுநடுங்கி விட்டாள். திடீரென்று இவர்களைக் கண்ட மாத்திரத்தில் கிழவிக்குத் தன் பேரன் உரைத்த பழைய செய்திகளெல்லாம் கண் முன்னால் தோன்றுவனபோலாகி மன வேதனை அதிகரித்தது. உடனே அவள், "ஐயோ! இவர்கள் அச் செய்தியைத் தெரிந்து தான் வந்திருக்கிறார்களோ? 'ஆ! எங்கள் பெண் எங்கே?' என்றால் நான் என்னசொல்வேன்! அவனோ பேச்சு மூச்சின்றிக் கிடக்கிறான். நான் என்ன செய்வேன்?" என்று பலவித யோசனையில் ஆழ்ந்தவளாய் மனங் குழம்பி இடிந்து வந்தவர்களை விசாரிக்கவோ, அவர்கள் முகத்தைப் பார்க்கவோ மறந்தவளாய் திக்பிரமைகொண்டு நின்றுவிட்டாள்.

கதவைத் திறந்தவுடன் கிழவி தங்களைக் கண்டு கலவரமடைந்ததையும், அவள் எதுவுமே பேசாது ஆழ்ந்தயோசனையிலிருப்பதையும் கண்ட இருவரும் மதிகலங்கி விட்டார்கள். அவர்களுடைய மனோ வேதனை முன்னிலும் பதின் மடங்கு அதிகரித்து விட்டது. "நம்மைக் கண்ட மாத்திரத்தில் எத்துணையோ பிரியமாக விசாரிக்கும் கிழவிஇப்போது நம்மைக் கண்டதும் திடீரென்று முகம் வேறுபட்டு ஏதோ மிகுந்த யோசனையில் ஆழ்ந்துவிட்டதன் காரணம் யாதாயிருக்குமோ தெரியவில்லையே!" என்று வருந்தியவாறே, ருக்மிணி கிழவியை நோக்கி, "என்ன அம்மா! ஏன் ஒருவாறாக நிற்கிறீர்கள்? குழந்தை மரகதம் எங்கே படுத்திருக்கிறாள்? எங்களுக்கு முதலில் அதைக் கூறுங்கள்" என்று ஆத்திரத்துடன் கேட்டாள்.

இதைக் கேட்ட கிழவி திடுக்கிட்டு விட்டாள். அவள் தேகம் ஆடிவிட்டது. அவள், "ஐயோ! இந்தக் கேள்விக்கு எவ்விதம் பதில் கூறுவது? என்ன விதமான பதில் கூறுவது? ஆ! கடவுளே! இதெல்லாம் உனது சோதனையோ! இத்தருணம் எனது பேர

னுக்குச் சற்று ப்ரக்ஞை வரும்படி செய்யலாகாதா! அவன் என்ன சொல்கிருனே அதே தாளத்தை நானும் போட்டுவிடுவேனே! அனியாயமாக அவள் உயிரை அவனே வாங்கினுன் என்று கூறுவதற்கும் முடியவில்லை. மகா உத்தமியாகிய மரகதவல்லியின் மீது வீணான குற்றமோ, அபவாதமோ கூறினல் உடனே கண்ணை விந்துவிடும். நான் என்ன செய்வேன்'' என்று வருந்தினுள். அத்தருணம் அவ்விடம் ஓர் நர்ஸ் வந்து, ''பாட்டியம்மா! ஐயா அவர்களுக்குச் சற்று நினைவு வந்திருக்கிறது; கஞ்சி எடுத்துக் கொடுங்கள்'' என்றுகேட்டாள்.

அதைக் கேட்டதும் கிழவி, ''தற்போது நாம் இங்கு நின்று இவர்களுக்குத்தக்க பதில் கூருமலே செல்வதற்குச் சாக்குக் கிடைத்துவிட்டது'' என்று ஒருவாறு தெளிந்து, வந்தவர்களை நோக்கி, ''வாருங்கள்; நான் என்னவென்று கூறுவேன்! தற்போது நான் நடுச்சாகரத்திலிருக்கின்றேன்; உட்காருங்கள்; இதோ வருகிறேன்'' என்று கூறியவாறு அவ்விடத்தைவிட்டுப் போய் விட்டாள். வந்தவர்களுக்கோ கிழவி கூறியதில் ஒன்றுமே விளங்கவில்லை. அதனல் அவர்கள் தவிக்கின்றூர்கள்.

கிழவி கஞ்சியுடன் நேரே தணிகாசலத்தின் அறைக்குப் போய் அவனைப் பார்த்தாள். அவன் சற்று தெளிந்திருந்தான். அதைக் கண்டு அவள் ஒருவிதத்தில் மகிழ்ந்தாள்; எனினும் மற்ற விஷயங்களைப்பற்றி மனத்தைக் கலக்கி உள்ளுக்குள் வேலை செய்யும் எந்திரம் சற்றும் நிற்கவில்லை. அந்த நிலைமையில் கிழவி தணிகாசலத்தினருகிலிருந்த நர்ஸை அப்புறப் படுத்திவிட்டுக் கதவைத் தாளிட்டுக்கொண்டு அவனருகில் சென்று, ''அப்பா! தணிகாசலம்! உடம்பு எவ்வித மிருக்கிறதப்பா?'' என்ருள்.

வெகு ஹீனக் குரலுடன் தணிகாசலம், ''உம். என் உடம்பா! என் கண்மணியை அனுப்பிய இடத்தைத் தேடிக்கொண்டிருக்கிறது'' என்று திணறித்திணறிக் கூறினன். அப்போது கிழவி, ''இவனுடைய கேவலமான இந்நிலைமையில் திடுக்கிடக் கூடிய செய்தியைக் கூறினல், அதனல் இவன் உயிர் திடீரென்று நீங்கி

விடுமோ? ஐயோ! சர்வேசா! இந்தத் தர்ம சங்கடத்திற்கு நான் என்ன செய்வேன்! .உம். எது வந்தாலும் நாம் தற்போது ஒன்றும் சொல்லாமலிருப்பது பெரும் விபரீதமாக முடியும். இவனுடைய நிலைமை மறுபடி மாறிவிடின் நாம் தான் அகப்பட்டு விழிக்க நேரிடும். ஆகையால் உள்ளதைச் சொல்வதே நலம்'' என்று எண்ணியவண்ணம் தணிகாசலத்தை நோக்கி, ''அப்பா! உன் னிடம் நான் ஓர் செய்தியைச் சொல்லப்போகிறேன். அதனால் நீ மனதில் நடுக்கத்தை வருவித்துக்கொள்ளாதே அதாவது:—உனது மாமியாரும், மாமனாரும் என்ன காரணத்தினாலோ, என்ன செய்தி யைக் கேட்டோ திடீரென்று இப்போது இங்கே வந்திருக்கிறார்கள். அவர்களைக் கண்டதும் நான் நடுங்கிவிட்டேன்; அவர்களுக்கு ஒரு விதமான பதிலும் சொல்லாமல் மெல்ல வந்துவிட்டேன்; அவர்கள் வந்தவுடன், 'எங்கள் குழந்தை எங்கே?' என்று கேட்டார்கள்; அவர்கள் அவ்விதம் கேட்டதிலிருந்து மரகதத்தைக் காணாத செய் தியை அறிந்தேதான் வந்திருப்பார்கள் என்பது தோன்றுகின்றது. அவர்களுக்கு நீ என்னபதில் சொல்லப்போகிறாய்? அதை என்னிட மும் தெரிவித்தால் நானும் அந்தவிதமே சொல்லிவிடுவேன்; அவர் கள் இங்கு வந்தாலும் வருவார்கள்; தாமதம் செய்ய நேரமில்லை'' என்று கூறினாள். இதைக்கேட்ட தணிகாசலம் நடுநடுங்கிப்போய் விட்டான். அவனுடைய மார்புத்துடிப்பு மேலும் அதிகரித்து வேகமாக அடிக்கத் தொடங்கிற்று. அவன், மெல்ல தன்னைத் தானே சமாதானப் படுத்திக்கொண்டு பேசத்தொடங்கி, ''பாட்டி! என்னுடைய விதியின் பயனை நான் இப்போது அனுபவிக்கிறேன். நீ எதற்கும் என் பக்கத்திலேயே இரு. நான் சொல்வதைக்கேட்டு அந்தப்படியே நட'' என்று இழுத்து இழுத்துச் சொன்னான். அவ் வாறு சொல்லிக்கொண்டே இருக்கையில் அறைக் கதவைத் தட்டும் சத்தம் கேட்டது. கிழவி கதவைத் திறந்தாள். உடனே ருக்மிணி யும், கண்ணபிரானும் உள்ளே பிரவேசித்துத் தணிகாசலத்தின் பரி தாபமான நிலைமையைக் கண்டதும் கலங்கிப்போய் விட்டார்கள். ருக்மிணி மெல்ல அவனருகில்சென்று, ''என்ன உடம்புக்கு? எத்தனை நாட்களாகப் படுக்கையிலிருக்கிறீர்கள்? குழந்தை எங்கே காணவில் லையே? அவளுக்கு உடம்பு அசௌக்கியம் ஏதேனும் ஏற்பட்டிருக்

கிறதா? தாங்கள் ஒரு தகவலும் எங்களுக்குத் தெரிவிக்காவிடினும், நாங்கள் எங்களுடைய அவாவினால் இவைகளை விசாரிக்கின்றோம்" என்று வெகு துக்கத்துடனும், சலிப்புடனும் கூறினாள்.

தணிகாசலத்திற்கோ இவர்கள் வந்திருக்கிறார்கள் என்பதைக் கேட்ட மாத்திரத்திலேயே குடலே நடுங்கிவிட்டது; இவர்களை நேரில் பார்த்ததும் உயிர்நிலை தளரவாரம்பித்தது; இவள் பேசியதைக் கேட்டதும் உயிரே போய்விட்டது போலாய்விட்டது. அவன் முந்தியே மிகவும் தளர்ந்த நிலைமையை அடைந்து ப்ரக்ஞையேயின்றியிருந்து மீண்டும் சிறிது ப்ரக்ஞையைப் பெற்றிருக்கும் தறுவாயில் திடீரென்று இவர்களைக் கண்டதனால் அவனுடைய மனம் மிக்க கலக்கத்தை யடைந்துவிட்டது. அதனாலேயே அவன் மேற்கூறிய நிலைமையை அடைந்துவிட்டான். அவன் கண்கள் கெட்டியாக மூடப்பட்டிருந்தன; எனினும் கண்ணீர் ஆறுகப்பெருகி வழிந்துகொண்டிருந்தது. அந்நிலையில் அவன், "இந்தக் கேள்விக்கு நாம் என்னபதில் கூறுவது? எவ்விதமான கட்டுக்கதை தயார் செய்து கூறினால் நமது சதியான வேலை வெளிப்படாமல் மறையும்? ஐயோ! இவர்களுக்குப் பெற்ற வயிறு பற்றி எரியுமே! மரகதமணிக்கு நாம் கொண்ட கணவனாக விருந்தும் அவளுக்கு மிருந்த பாதகம் செய்துவிட்டோமே! இவர்களுக்குப் பதில் கூறுதிருப்பதும் சரியல்லவே! இவர்கள் ஏதோ விஷயத்தை யறிந்துதான் வந்திருக்கிறார்களென்பது தெரிகின்றது. இந்நிலையில் நாம் எதுவும் சொல்லாதிருந்தால் இவர்களுடைய வேதனை இன்னும் அதிகப்படுமே! ஹா! இந்த விபரீதமான ஆபத்திற்கு நான் என்ன செய்வேன்? ஏ! ஜகத்ரக்ஷகா! ஆபத்பாந்தவா! ஹரியே! என்னை என்னவிதமான துயர்க்கடலில் மூழ்கவைத்து விட்டாயப்பா!" என்று சிந்தித்தபடியே சற்று யோசித்தான். ஒருவிதமான முடிவு அவன் மனதில் ஏற்பட்டது; அதன்மேல் அவன், "இந்த யுக்திதான் சரி" என்று தீர்மானித்து, அப்போதுதான் கண்ணைத் திறந்து பார்ப்பவன்போல கண்ணைத் திறந்து பார்த்து, அவர்களை நோக்கி, மெல்லக் கையை எடுத்துக் கூப்பியபடியே, "ஆ! மாமா! மாமி! வந்தனம். வாருங்கள். நீங்கள் எப்போது வந்தீர்கள்?" என்று மெல்லக் கேட்டு ஆசனத்தைக் காட்டி, அதில் அமரும்படி தெரிவித்தான்.

இதைக்கேட்ட இருவரும் அமராமலே நின்றபடியே பேசத் தொடங்கினார்கள். "மருமகப்பிள்ளையவாள்! எங்களை விசாரிப்பது பிறகு இருக்கட்டும். இதோ இந்தத் தந்தியைப் பாருங்கள். இது இன்றுதான் எங்களுக்குக் கிடைத்தது. உடனே நாங்கள் ஆவியும் உடலும் அலையக்குலைய மனந்துடிக்க ஓடி வந்தோம். வந்ததும், இதுவரையில் எங்கள் குழந்தையைக் காணவில்லை; உண்மையான விஷயம் யாது? குழந்தைக்கு என்ன ஆபத்து? அவள் இருப்பதும் தெரியவில்லை; இறந்ததும் தெரியவில்லையே; அது விஷயத்தை உடனே தெரிவிக்கவேண்டும்" என்று கண்ணபிரான் கேட்டான்.

இவ்விதம் செய்தி நடந்திருக்கும் என்பதைக் கனவிலும் கருதாத தணிகாசலம் அந்தத் தந்தியைக் கண்டதும் அளவில்லாத மனவேதனையடைந்து திடுக்கிட்டு, நடுக்கமுற்று, இடிந்துபோய் அப்படியே ஸ்தம்பித்து அசைவற்றுச் சோர்ந்து விட்டான். அவன் உயிர் ஊசலாடுகின்றது. முன்னே அவன் பொருத்தமான கதை ஏதேனும் சொல்லி அவர்களைச் சமாதானப்படுத்த வேண்டுமென்று எண்ணினான். அப்படி நினைத்து அதைச் சொல்ல ஆரம்பிப்பதற்குள் இடி வீழ்ந்தது போல பெருத்த கோடை யிடியாகிய தந்தி தலைமீது விழுந்துவிட்டது. அதனால் அவன், "ஐயோ! என்ன செய்வேன்? நம்முடைய விஷயத்தின் உளவை யறிந்த யாரோ தந்திகொடுத்து இவர்களை வரவழைத் திருக்கிறார்க ளென்பது தோன்றுகின்றதே! தந்தியடித்தவர்கள், தாங்கள் இன்னாரென்று விளங்காவண்ணம், "உண்மை நண்பன்" என்றல்லவா கையொப்பமிட்டிருக்கிறார்கள். ஆ! என்ன செய்வேன்? எனது நிலைமை இரு தலைக் கொள்ளியி னடுவிலகப்பட்ட எறும்பின் நிலைமை போலாய் விட்டதே! இந்தக் கேள்விக்கு நான் யாது பதிலளிப்பேன்? நான் சற்றுநேரத்திற்கு முன் யோசித்து முடிவு செய்தது இந்தத் தந்தியால் முற்றிலும் கெட்டுவிட்டதே! ஐயோ! எனது மந்த மதியினால் அதிபரிசுத்தமான கற்பையுடைய மரகதத்தை வருத்தப் படுத்தி வயிறெரியச் செய்து கண்ணீர் பெருகித் துடிக்கவைத்த பாபி எனக்கு இந்த வதை போதாது; என்னைச் சித்திரவதை செய்தாலும் அப்பாபம் தீராதே! ஆ! மரகதவல்லி! நான் உனது மகிமையறியாது மாசுபடிந்த மதியுடன் உனக்குப் பரிபவம் செய்த

போதிலும் நீ என்னிடத்தில் பரிபூரண பக்தி விசுவாசமும், கரை காணாத பிரியமும், அளவிலா அன்பும் வைத்துள்ளவளன்றோ ! என் கண்ணே ! இந்த வேளை நீ வந்து எனது தப்பிதத்தை மன்னித்து எனக்கு ஓர் யுக்திசொல்ல முற்படமாட்டாயா ! ஐயோ ! நான் என்ன மானம் கெட்ட பிழைப்புப் பிழைக்கிறேன்" என்று தனக்குள்ளாகவே சொல்லிக்கொண்டு எண்ணுதும் எண்ணிப் புண்ணுகிய மனத்துடன் தாங்கமாட்டாத விசனத்தினுல் மூர்ச்சையாகிவிட்டான். எனினும் சில நிமிஷங்களில் மூர்ச்சை தெளியப் பெற்றவனுய்க் கண்ணைத் திறந்து பார்த்துக் கோவென்று கதறிய வண்ணம், "ஓ! என் மாமி ! மாமா ! நான் என்னவிதமான பதிலை யுங்களுக்கு அளிக்கப் போகிறேன் ! என் பாபம் சாமானியமாக என்னைச் சூழவில்லையே ! என்னை அடியோடொழிக்க முற்பட்டுவிட்டதே !" என்று கூறிப் புலம்பினுன்.

அவன் அப்போதும் விளங்காதவிதமாகப் புலம்பியதைக்கேட்ட அவர்களுக்கு முன்னிலும் அதிகரித்த குழப்ப மேற்பட்டுவிட்டது ; அதனுல் அவர்கள் மனங்கலங்கி நின்றுர்கள். அதன்மேல் அவர்கள், " இங்குள்ள நிலைமையையும், இவர்கள் பேசும் மாதிரியையும் ஆலோசிக்கும்போது ஏதோவிபரீதம் நடந்திருப்பதாகவே தோன்றுகின்றதேயன்றி நடந்தது இன்னதென்று விவரம் தெரியவில்லையே! ஐயோ! குழந்தைக்கு என்ன நேர்ந்துவிட்டதென்று கூறப்போகிறுர்களோ ! தெரியவில்லையே !" என்று பதறித் தணிகாசலத்தை நோக்கி, "ஆ ! இதென்ன தாம் கூறுவதின் விவரம் ஒன்றும் எங்களுக்குத்தெரியவில்லையே ! விஷயத்தை விளக்கிக் கூறலாகாதா ! எங்கள் வயிறு துடிக்கின்றதே ! குழந்தை எங்கே ? சீக்கிரம் சொல்லுங்களே" என்று ஆத்திரத்தோடும், மனக்கலக்கத்துடனும் கேட்டார்கள். இதைக்கேட்ட தணிகாசலம் இதற்கு இன்னபதில் சொல்வதென்பதை யறியாது அதிக மனக் குழப்பத்தை யடைந்து விம்மி விம்மி அழுதபடியே பெரிய யோசனையில் மூழ்கிவிட்டான். ருக்மிணியும், கண்ணபிரானும் தணிகாசலத்தின் வாயிலிருந்து என்ன சொற்கள் வரப்போகின்றனவோ என்று வெகு ஆவலுடன் எதிர் நோக்கி அவன் முகத்தையே பார்த்த வண்ணமிருக்கிறுர்கள்.

ஐந்து நிமிஷங்கள்வரை எல்லோரும் மௌனமாகவே யிருந்தார்கள். பின் தணிகாசலம் சற்று சமாளித்துக்கொண்டு அவர்களை நோக்கிப் பேசத்தொடங்கி, " ஆ! மாமி! மாமி !! நான் பெரும் பாவியாகிவிட்டேன். மாமா ! எனது விதியை வாயினுல் கூறவும் நான் விசனிக்கிறேன். என்னைத் தாங்கள் என்னென்ன செய்தாலும் என் குற்றம் தீராது; அவற்றை யெல்லாம் அடைவதற்கு நான் தயாராகவிருக்கிறேன் ; என்னுடைய தீவினையே என்னை முற்றிலும் பாழ்படுத்திவிட்டது ; எனது வெட்கக்கேடான நிலைமையை நான் மானத்தை விட்டு உங்களிடம் கூறிவிடுகிறேன் ; நரஸிம்மனின் அக்ஷராப்யாசத்திற்கு இருவரும் புறப்பட்டு ரயிலடிக்குச் சென்ருேம். ரயில் வருவதற்கு நேரமானதால் கையில் வைத்திருந்த பெட்டியுடன் நாங்களிருவரும் மைதானமாயுள்ள ஓர் இடத்திற்குச் சென்றிருந்தோம். அவ்விடத்தில் ஓர் பைராகி தோன்றினுன். அவன் எங்களைப் பார்த்து, "உங்களுக்கு நல்ல ஆண்குழந்தை பிறக்கப்போகிறது; அது வெகு அதிர்ஷ்டத்துடன் இருக்கும்; அதனுல் உங்களுக்கு வெகு சுகம் கிடைக்கும்" என்று பல ஜோஸ்யங்களைக் கூறிக்கொண்டே வந்தான். அவற்றை நாங்களும் கவனிப்பாகக் கேட்டுக்கொண்டே வந்தோம். அப்போது அவன் கையிலிருந்த ஏதோ ஒரு பொடியை எங்களிருவரின் முகத்திலும்போட்டுவிட்டான். அவ்வாறு போட்டுவிட்டு ஒருபக்கத்தில் சென்ருன். உடனே நாங்களும் அவன் பின்னே சென்றுவிட்டோம். அதுவரையில் தான் எனக்கு நடந்தவிஷயம் தெரியும்; பிறகு, 'நாங்கள் எங்கே சென்ருேம் ? என்ன நடந்தது ? நான் எவ்விதம் இங்கு வந்தேன் ?' என்ற விஷயங்களில் ஒன்றும் எனக்கு இன்று உதயம் வரையில் தெரியாது. நான் மிகுந்த ப்ரமை பிடித்தமாதிரி ப்ரக்ஞையே அற்றிருந்தேன். இப்போதுதான் எனக்குத் தெளிவு பிறந்திருக்கிறது; பாக்கிச் செய்திகளைக் கிழவியைக் கேட்டுத் தெரிந்துகொள்ளுங்கள். என்னுல் பேசமுடியவில்லை" என்று இழுத்து இழுத்துக் கூறினுன்.

இந்த விபரீதமானதும், உயிரை வதைக்கக் கூடியதுமான செய்தியைக் கேட்டு இருவரும் நடுநடுங்கி, " ஆ ! அப்புறம் என்ன

நடந்தது? குழந்தை எங்கே?" என்று ஆத்திரத்தோடு கேட்டார்கள்.

இவன் கூறிய செய்தியைக் கவனமாகக் கேட்டுக்கொண்டிருந்த கிழவி, அதற்கிசைந்தாற்போல் தானும் பேசவேண்டிய உபாயத்தைத் தீர்மானித்துக்கொண்டு, அவர்களிடம் பேசத்தொடங்கிப் புலம்பியபடியே, "ஐயோ! அந்த வயிற்றெரிச்சல் சமாசாரத்தை எப்படி நான் வாய் கூசாமற் சொல்லுவேன்! இப்படிப்பட்ட கஷ்டமும் நேருமோ! எனக்கும் இதைப்பற்றிய செய்தி அதிகமாக எதுவும் தெரியாது. உங்கள் வீட்டுப் பையனின் அக்ஷராப்பியாசத்திற்கு வருவதற்கு என்னிடம் இருவரும் சொல்லிக்கொண்டு ரயிலடிக்குப்போய்விட்டார்கள். பிறகு 4, 5 நாள் கழித்து, இவன் மட்டும் வந்தான். மரகதத்தை நீங்கள் நிறுத்திக்கொண்டிருப்பீர்களென்று நான் நினைத்தேன். பின்னர் இவனைப் பார்த்தேன். இவன் பயித்தியம் பிடித்தவன் போல வந்தான். மரகதவல்லி எங்கே என்று இவனிடம் விசாரித்தேன். அதற்குப் பதிலே இவன் சொல்லவில்லை. நான் ஒன்று பேசினால் இவன் ஒன்று பேசினன். அடிக்கடி நகைத்தான். உன்மத்தனைப்போல் வேறு பல சேஷ்டைகளையும் செய்தான். எனக்கோ பயமுண்டாகிவிட்டது. நான் என்னவென்றறிவது? எனக்கோ எழுதப் படிக்கத் தெரியாது; யாரையேனும் கொண்டு இவ்விஷயத்தை உங்களுக்கு எழுத எண்ணினேன். அதற்குள் எனக்கு வழக்கமாக வரும் மாரடைப்பு வந்துவிட்டது. அதனால் 3 நாள்வரை நான் பேச்சுமூச்சின்றிக் கிடந்தேன்; உயிர் நீங்கும் நிலைமையை அடைந்துவிட்டேன்; அப்போது நான் சற்றுவிழித்துப் பார்த்தேன்; தணிகாசலத்தின் நிலைமை மிகவும் பரிதபிக்கக் கூடியதாயிருந்தது. அவனைப் பார்த்ததும் எனக்கு மேலும் மயக்கம் அதிகரித்துவிட்டது; ஞாபகமெல்லாம் அடங்கிவிட்டது. பூமியும், ஆகாயமும் ஒன்றாகத் தோன்றின. எனக்கு ஒன்றுமே தெரியவில்லை. என்னையே நான் மறந்து பித்தம் பிடித்தவளைப்போலாகி விட்டேன். இந்நிலையில் இவனுடைய கக்ஷிக்காரன் வந்து எங்களைப் பார்த்து வைத்தியரைக்கொண்டு எனக்கு மருந்துகொடுக்கச் செய்தான்; சிறிது தெளிவுண்டாயிற்று; பிறகு

தணிகாசலத்தின் புத்தி மாறுட்டத்திற்கு ஏதாவது காரணமிருக்கு மென்று நாங்கள் மந்திரவாதியைக்கொண்டு இவனைப் பார்க்கச் செய்தோம்; அவன் இவனுக்கு ஏவல் ஏற்பட்டிருக்கிற தென்று தெரிவித்து, அதை மந்திரத்தினுல் எடுத்துவிட்டான். இன்று விடியற்காலந்தான் இவன் சுய உணர்வைப் பெற்றுன்; அவ்வாறு தெளிவுண்டானதும், "ஆ! மரகதவல்லி! மரகதவல்லி!" என்று பினத்தினன். பின்னர் நான் விசாரித்ததில் மேற்கண்டபடி உங்களிடம் கூறிய விஷயத்தைத் தெரிவித்தான். அதுபரியந்தம் அவள் உங்கள் வீட்டிலிருப்பதாகவே நான் நினைத்தேன். அதன் மேல், மேற்கூறிய விஷயம் தெரிந்ததும் கதறினேன். பின்னர் இச்செய்தியைப் பார்த்திருந்த கக்ஷிக்காரன் தங்களுக்கு இவ்விதம் தந்தியடித்திருக்கிறுன். நான்தான் அடிக்கச்சொன்னேன்" என்று கூறினுள். அவ்வாறு சொல்லி முடிப்பதற்குள் ருக்மிணி, "ஆ! ஐயோ! என்கண்ணே! மரகதவல்லி! இவ்விதமாகவா உன் கதி முடிந்தது! எங்கள் வீட்டிற்கு இருவரும் வரவே இல்லையே! எந்தச் சண்டாளன் உங்களை இவ்விதம் செய்யத் துணிந்தானே தெரிய வில்லையே?" என்று புலம்பி முட்டிக்கொண்டு பூமியில் விழுந்தாள். கண்ணபிரானும் தன்னை மறந்து கதறுகிறுன்.

10 நிமிட காலம் இருவரும் தாங்கவியலாத துயரத்தினுல் துடித்துப் புலம்பிப் பின்னர்ச் சற்றுத் தெளிந்தார்கள். ருக்மிணி கிழவியை நோக்கி, "ஐயோ! இதென்ன விபரீதச் செய்தியாக விருக்கிறதே! உங்களுக்குப் படிக்கத் தெரியாவிட்டாலும் உடனே இச்செய்தியைப் போலீஸில் தெரிவிக்கக் கூடாதா! அல்லது யாரை யாவது கொண்டு எங்களுக்கு ஒரு தந்தி அப்போதே அடிக்கக் கூடாதா! ஐயையோ! என் குழந்தை அநியாயமான ஆபத்தில் சிக்கி என்ன செய்கிறுளோ? அவளுடைய உயிர் இருக்கிறதோ இல்லையோ தெரியவில்லையே! நான் என்னசெய்வேன்!" என்று வெகு விசனத்தோடும், வயிற்றெரிச்சலுடனும் கூறினுள்.

இதைக் கேட்ட கிழவி, புலம்பியவாறு, "ஐயோ! நீங்கள் கூறிய விஷயங்களைச் செய்ய எனக்குத் தெரியாமல் நான் சும்மா இருந்துவிடவில்லை; இந்தச் சதியான செய்தி எனக்குத் தெரியா

மலிருந்ததால் அப்படி யிருந்துவிட்டேன்; அவர்களிருவரும் உங்கள் வீட்டிற்கு வரப் புறப்பட்டதும், ரயிலடிக்குச் சென்ற விவரமு மன்றி வேறு எனக்கு ஒன்றும் தெரியவராது; என்றைய தினம் அக்ஷராப்யாசம் என்பதும் எனக்கு விவரமாகத் தெரியாது; இன்று காலையில்தான் எனக்கு இந்த விவரம் தெரிந்தது; உடனே நான் தந்தி யடிக்கச்செய்தேன். முந்தியே விஷயம் தெரிந்திருந்தால் உங்களுக் கதை நான் தெரிவிக்காமலிருப்பேனு? அப்படித் தெரிவிக்கா மலிருப்பதற்கு உங்கள்மீது எனக்கென்ன விரோதமா? இச்செய்தி இன்னும் இவனுடைய தங்கைக்கும் தெரியாது; அதை அவளுக்குத் தெரிவிக்க எனக்கு சக்தியுமில்லை, நேரமுமில்லை; நான் என்ன செய்வேன்?'' என்று அலறினுள்.

கண்ணபிரானுக்கு எதுவுமே பேசமுடியவில்லை. அவனுக்கு மிகவும் பிரியமானவள் மரகதவல்லியேயாவள். ராஜேஸ்வரி தாயாருக்கு மிகவும் அன்பானவள். மரகதத்தின் ஆபத்தான செய்தியைக் கேட்டதும் அவன் அதிகமாகக் கலங்கிக் கண்ணீர் சோரவிட்டு மனமிடிந்து உட்கார்ந்துவிட்டான். இவ்விஷயத்தில் தப்பு யார்மீதும் காணப்படவில்லையாதலாலும், விஷயம் விதி வல்லமையால் நேர்ந்ததாகத் தோற்றுவதனுலும், அவன் யாரையும் நோகவோ, திட்டவோ, சண்டைக்கிழுக்கவோ, விரோதித்துக் கொள்ளவோ ஏதுவில்லாமற் போய்விட்டது. நடந்த செய்கையின் தன்மை இப்படி யிருந்ததனுல், கண்ணபிரான், ''இந்தத் தகவலைக் கண்டுபிடிக்கப் போலீஸில் எழுதிவைத்தால் அதனுல் ஏதேனும் பலன் கிடைத்தாலும் கிடைக்கக்கூடும்; இதையன்றி வேறு என்ன செய்யலாம்? இன்னும் மந்திரவாதிகளைக் கொண்டும், ஜோஸியர் களைக்கொண்டும் புலம் கண்டுபிடிக்க ஏற்பாடு செய்யலாம்; மற்ற வழிகளில் விமோசனமொன்று முண்டாகாது; ஆகையினுல் நாம் அனுவசியமாக இங்கு இருப்பது கூடாது'' என்று யோசித்து, மறுபேச்சே பேசாது, ''உம். ருக்மிணி! வந்தவேலை வெகு சந்தோஷமாக முடிந்துவிட்டது; கிளம்பு போவோம்; ஏதோ நம்மா லான ப்ரயத்தினத்தைச் செய்து பார்ப்போம்; கடவுளிருக்கிருர்'' என்று கூறியவாறு அவ்விடத்தை விட்டுக் கிளம்பிவிட்டான்.

ருக்மிணியும் மறுவார்த்தை பேசாமல் அழுதவண்ணம் அவன் பின்னுல் புறப்பட்டாள். இருவரும் தாங்கள் வந்த வண்டியிலேயே ஏறிக்கொண்டு இரவென்பதையும், அகால மென்பதையும் சோகத்தினுல் கவனிக்காது புறப்பட்டு விடியற்காலம் வீடு வந்து சேர்ந்தார்கள். ராஜேஸ்வரி இவ்விஷயத்தை அவர்கள் மூலம் கேள்விப்பட்டு மிகவும் வருந்திப் புலம்பினுள். பின்னர்க் கண்ணபிரான் அன்று சமாசாரப் பத்திரிகைக்கு மரகதவல்லியின் உருவப் படத்தின் பிளாக்குடன் இதைப்பற்றிய விவரத்தை எழுதியனுப்பினுன். அதாவது:—

"மோசம்! மோசம்!! படுமோசம்!!!

இதைக் கண்டுபிடிப்போர்க்குப் பத்தாயிரம் ரூபாய் இனும்.

சென்ற புதவாரத்தன்று திருவள்ளூரில் ரயிலடிக்கருகிலுள்ள மைதானத்தில் 18 வயது மதிக்கக் கூடியவளும், இத்துடனிருக்கும் புகைப் படத்திலுள்ள கட்டழகியுமான எனது குமாரத்தியும், தணிகாசல ரெட்டியாருடைய தர்ம பத்னியுமாகிய மரகதவல்லியம்மாள் என்பவளும், அவளுடைய புருஷரும் உலாவிக்கொண்டிருக்கையில் ஓர் பைராகி அவ்விடம் தோன்றி, அனேகம் வார்த்தைகளை ஜோஸியம் சொல்வதுபோலச் சொல்லி ஏதோ ஒரு தூளை அவர்கள்மீது தூவி விட்டானும். அந்தத் தூளில் அவனுல் ஏற்றப்பட்டிருந்த மாந்திரீக சக்தியினுல் வசியப்பட்டு இருவரும் அவன் கூடவே சென்றுவிட்டார்களாம். பின் சில தினங்கள் கழித்து, தணிகாசல ரெட்டியார் மாத்திரம் எவ்விதமாகவோ தம்மை யறியாமலே சித்த ப்ரமை கொண்டு வீடு வந்து சேர்ந்தார். அந்த யுவதியின் தகவல் இது வரையில் கிடைக்கவில்லை. அந்த அம்மாள் தற்போது 5 மாத கர்ப்பிணி; அவளுடைய நிறம் எலுமிச்சம் பழத்தை யொத்திருக்கும். மற்ற அடையாளங்களை இத்துடனிருக்கும் புகைப் படத்தைக் கொண்டு தெரிந்துகொள்ளலாம். இந்தப் படத்திலுள்ள பெண்மணியை யார் கண்டுபிடித்துக் கொண்டுவந்து சேர்த்தாலும் ரூ.10000 (பத்தாயிரம் ரூபாய்) அவர்களுக்கு இனும் கொடுக்கப்படும். இந்தத் தகவலைப் போலீஸுக்கும் தெரிவித்துள்ளேன்; அவர்களும் தகுந்த சிரத்தை எடுத்துக் கொள்வார்களென்று

நினைக்கிறேன். விஷயம் தெரிவிக்கவேண்டியவர்கள் அடியிற் கண்ட விலாசதாருக்குத் தெரிவித்துக்கொள்ளலாம்:

N. கண்ணபிரான் ரெட்டியார்,
ஜாகிர்தார், "க்ருஷ்ணவிலாஸம்,"
ராயபுரம், சென்னை."

என்பதே. அவன், இந்த வர்த்தமானத்தைச் சமாச்சார பத்திரிகாலயத்திற்கு அனுப்பிவிட்டுப் போலீஸுக்குச் சென்று அவ்விடத்திலும் விஷயத்தை விவரமாகத் தெரிவித்துவிட்டு வீடு வந்து சேர்ந்தான்.

இதற்குள் இச்செய்தி இவர்களுடைய உறவினர்களில் சிலருக்குத் தெரிந்து அவர்கள், இவர்களிடம் வந்து அதைப்பற்றி விசாரிக்கத் தலைப்பட்டுவிட்டார்கள். ருக்மிணியோ படுத்தவள் எழுந்திருக்கவேயில்லை. கண்ணபிரான் தினந்தோறும் தனக்கு நல்ல செய்தி கிடைக்குமா என்று எதிர்பார்த்துக் கொண்டிருந்தான். கோமளவல்லி காய்ச்சல் நோய்கொண்டு படுத்துவிட்டபடியாலும், அதிகமாக இங்கு வராமையாலும் அவளுக்கு இந்தச் செய்தி உடனே தெரியாமல் போயிற்று; தாமோதரன் ரங்கோன் சென்றபின்னரே தெரிந்தது. அவ்வாறு தெரிந்தவுடனே தாமோதரனுக்கு அவள் இதைக் கடித மூலம் தெரிவித்தாள். அவன் பேப்பர் மூலம் முந்தியே இச்செய்தியைத் தெரிந்துகொண்டதோடு, கோமளவல்லியின் கடிதத்தாலும் அறிந்து மிகுந்த விசனமடைந்தான். அதன்பின் அவனுக்குக் கண்ணபிரானும் இவ் விவரத்தைப் பற்றிக் கடிதமெழுதினான். அக்கடிதத்தைக் கண்டும் அவன் வருந்தினான். ராஜமோ தனது விஷயத்தைப்பற்றிய கவலையுடன் சகோதரியின் விஷயமாக நேர்ந்த வருத்தமும் சேர்ந்து தன்னை வாட்டியதால் நாளுக்கு நாள் உடல் மெலிந்துவந்தாள். இச்செய்திகள் இங்ஙனமிருக்க, இனி நாம் நமது மரகதவல்லியின் செய்தியிற்றிரும்புவோம்.

அவள் தனது ப்ராணபதிக்கும், அவனுடைய நேசனுக்கும் கடிதங்கள் எழுதி முறையே ஒன்றை மேஜைமீது வைத்து, தான்

அணிந்திருந்த ஆடை யாபரணங்களைக் கழற்றி வைத்துவிட்டு, மற்றொரு கடிதத்தைத் தன் நாயகனிருந்த அறைக்குள் ஜன்னல் வழியாக வீசி எறிந்துவிட்டு, நேரே பூஜை யறையை நோக்கி இருளில் புலம்பியபடியே சென்று, ஸ்வாமியுள்ள திக்கில் சாஷ்டாங்கமாக விழுந்து நமஸ்கரித்து, "எ கருணையங்கடலே! ஆபத்பாந்தவா! தீன ரக்ஷகா! உலகத்தில் நேரில் உன்னாலும், நீயே வேறு மகான்கள் ரூபமாகத் தோன்றியகாலத்தில் அன்னாராலும், எத்தனை அபுரூபங்களும், விசித்திரங்களும் செய்து காட்டியிருக்கிறாய்! அவ்விதமிருக்க எனது ப்ராணபதியின் மனத்தையும், ஐயத்தையும் மாற்றுவது மட்டும் உனக்கருமையாகிவிட்டதே! ஹா! இனி பாவியான், பதியினால் மனமார விபசாரி என்று கருதப்பட்ட பின்னர் உயிருடன் இருந்தால் அதைக்கண்டு நீயே நகைக்கமாட்டாயா? என்னப்பனே! இதுவே உனது கடைசி தரிசனம். இவ்வறையில் எவ்விதமான இருளில்நீ குடியிருக்கிறாயோ அதேபோல கலக்கமென்னும் அந்தகாரமானது என் மனத்தை மூடிக்கொண்டிருந்தாலும் அதன் மத்தியில், உனது ஜோதிபோன்ற கற்பாகிய தெய்வம் கோயில் கொண்டிருக்கிறதென்பதை நீ யறியமாட்டாயா! இது நீ யறியாததன்று. இன்றில்லாவிடினும் மற்றொரு காலத்திலாவது எனது பரிசுத்தமான கற்பின் தன்மையை நீ எடுத்துக் காட்டுவாய்; என்னப்பனே! இந்த ஒரு வேண்டுகோளே உன்னை நான் வேண்டுகிறேன். என் மனத்தில் அதிகரித்துப் பொங்கும் வேட்கை இஃதொன்றுதான். இதைப் பூர்த்திசெய்தாலன்றி என்னுயிர் சரியானபடி செல்லாது. நீ இதையேனும் என்பாலிரங்கிச் செய்தருள்வாய்; என்னப்பனே! என தின்பவடிவமாகிய என் பதியை யாதொரு குறைவுமின்றிக் காத்தருள்வாய். ஈசா! நேரமாகிவிட்டது; கடிதத்தைப் படித்துவிட்டு, அந்த மனிதன் கோபங்கொண்டு நம்மைத் தேடிவந்தாலும் வரக்கூடும்; நாம் இனி இங்கிருப்பது தகாது; உடனே செல்ல வேண்டும்; என் உணவும், இருப்பிடமும் இவ் வீட்டில் இந்நேரத்தோடு முடிந்துவிட்டது; நான் செல்கிறேன்; என்னப்பனே! ஜகதீசா! சர்வேச்வரா!" என்று கூறியபடியே கண்ணீர் பெருக மெல்ல புழைக்கடையை அடைந்து, கதவைத் திறந்துகொண்டு வெளியில் சென்று, அக்கதவு வெளிப்புறமிருந்து உள்பக்கம் பூட்டிக்

கொள்ளக் கூடியதாகையால், தான் சென்றதை எவரும் அறிந்து கொள்ளாதபடி, வெளிக் கதவிலிருந்த சாவித் துவாரத்தின் வழியாகச் சாவியைப் போட்டுத் தாளைத் திருப்பிப் பூட்டிவிட்டு அழுத விழியும் தொழுத கரமுமாக அவ்விடத்தைவிட்டு நடக்கவாரம்பித்தாள்.

“நாம் தப்பித்துக்கொண்டதை யறிந்து அந்த மனிதன் நம்மீது ஆத்திரங்கொண்டு நம்மைத் தேடிப் பின் தொடருவானோ!” என்றகிலியே அவள் மனத்திலிருந்தபடியாலும், அன்று அவள் மனத்தில் சொல்லொணுக் கலக்கங்கள் ஏற்பட்டுத் தாங்கமுடியாத சங்கடங்களை விளைவித்துக்கொண்டிருந்தமையினுலும் அவளுடைய அங்கம் முற்றும் சோர்வடைந்து தளர்ந்து, உணர்ச்சியற்றதாகிவிட்டது. அதனுல் அவளுடைய கால்கள் வேகமாக நடக்கமுடியாமல் தளர்ந்து, நடுக்கமுற்று, ஒன்ருேடொன்று பின்னிக்கொண்டு அவளுக்கு மிகுந்த துன்பத்தைச் செய்தன. எனினும், அவள் அப்போதடைந்திருந்த மனத் துயரத்தினுல், தான் மீண்டும் அம் மனிதன் கையில் சிக்காமல் எவ்விதமேனும் விரைந்து சென்று தனது உயிரை விட்டுவிடவேண்டும் என்று பூர்ணமாகத் தீர்மானித்திருந்தபடியால், தன்னுல் கூடியமட்டும் விசையாகவே நடந்து திரும்பித் திரும்பிப் பார்த்தவண்ணமாகச் செல்கிருள். அவ்வூரில் அவள் வெகுநாட்களாக வசித்துவந்தாளெனினும், அவ்வூரை முற்றும் சுற்றிப் பார்த்தவளல்ல. ஆகையினுல் அவளுக்குச் சரியானபடி வழியும் தெரியாது. அந்நிலையில் அவள், தான் எத்திக்கில், எங்குச் செல்வதென்பதும் தெரியாமல் மனம் போன போக்கில் நடந்து தாறுமாருகச் சென்றுகொண்டே நெடுந்தூரம் போய்விட்டாள். தான் செல்லும்பாதை இன்னதென்பது அவளுக்குத் தெரியாவிடினும் எவ்விடத்திலேனும் பெரிய குளமோ, தூரவோ இருக்கின்றனவா என்று அவற்றைத் தேடுவதிலேயே தனது விழியைச் செலுத்திக்கொண்டு சென்ருள். வெகுதூரம் சென்றதும் ஓர் குளம் அவள் கண்ணிற்குப் புலப்பட்டது. ஆகா! அதைக் கண்டதும் அவள் ஏதோ பெரிய புதையலைக் கண்டு சந்தோஷம் கொள்பவர் போல அளவற்ற மனமகிழ்ச்சியை யடைந்தவளாய் அக்குளத்தின்

சமீபத்திற் போய்ப் பெரியதோர் கல்லை எடுத்துத் தனது மடியில் கட்டிக்கொண்டு அதில் தடதடவென்று இறங்கி எல்லாப் படிகளையும் கடந்து தண்ணீரருகில் சென்று நின்று, "ஆ! என்னப்பனே! இந்நேரத்துடன் எனது பிறவியின் பிணி நீங்குகிறது; எனினும், நான் எனது உயிரைத் தற்கொலை செய்துகொள்ளும் பாபமானது என்னைத் தொடருகிறது; அங்ஙனம் இப்பாவ மூட்டை சேர்வதாயிருந்தாலும், நீ என்மீது தண்ணருள் புரிந்து அதை நிவர்தித்து எனது உயிரை உனது சரணங்களில் சேர்த்துக்கொள்வாய் எனதப்பனே! எனது பிறவியில் யான் அறிந்தும், அறியாமலும் எத்தனையோ பிழைகளையும், அளவிலாப் பாபங்களையும், எண்ணிலாத் தீமைகளையும், பிறர்க்கு அலகிலாத் துன்பங்களையும் செய்திருக்கலாம்; ஜகமெல்லாம் ரக்ஷிக்கும் என் ஆதிமூர்த்தியே! அமுதே! எனையாளும் அப்பனே! உனது மகிமை பொருந்திய சகிப்புக் குணத்தினுல்,

> எத்தனைஎத் தனைபாவம் எளியேன்செய் திருந்தாலும்
> அத்தனே! அத்தனையும் நீ அருளால் அகற்றியுன்றன்
> உத்தமமாங் கருணைதனை உவந்துடனே செய்தெனது
> சித்தமகிழ்ந் திடுமாறு சேவடிதந் தாள்வாயே.

என்னிடமுள்ள அனேக விதமான தோஷங்களை யெல்லாம் போக்கி, உனது திருவடியில் இப்பாதகியைச் சேர்த்துக் கொள்வாயப்பனே! எனது நாதனை யாதொரு குறைவு மின்றிக் காப்பாற்றுவாய் ஈசா! எனதரிய கற்பின் மாட்சியை என்பதிக்கு இனிது எடுத்துக்காட்டும்படி உனது பாதத்தில் வேண்டுகிறேன்" என்று பலவாறுகக் கடவுளை வேண்டித் தன தாடையை நன்ருக இறுக்கிக் கட்டிக்கொண்டு தண்ணீரில் குதிக்கத் தயாராஞள்.

அத்தருணமே அவளது நினைவு வேறுவிதமாக மாறிற்று. எங்ஙனமெனில், அப்போது அவளது வயிற்றில் ஓர் பெரிய கல்லை வைத்து இறுகக் கட்டியிருந்ததால், அந்தக் கல் வயிற்றில் பலமாகத் தாக்கிற்று; அதனுல் வயிற்றிலுள்ள சிசு நிலைவிட்டுப் பெயர்ந்து வேகமாக எழும்பத்தலைப்பட்டது. அதனுல் மிக்க வேதனை

யுண்டாயிற்று. அந்த வேதனையை அப்போதே மரகதம் உணர்ந்தாள். அவ்வாறுணர்ந்ததும் அவளுக் கப்போது உண்மையான இரக்கம் அச்சிசுவின்மீது உண்டாயிற்று. அவள் கண்ணீர் முன்னிலும் அதிகமாகப் பெருக வாரம்பித்தது. உடனே அவள், "ஆகா! நாம் இறப்பதோடு மாமிசப் பிண்டமாகிய இச் சிசுவையும் வதைக்கத் துணிந்துவிட்டோம்; இந்தச் சிசுஹத்திபாவமானது நாம் எத்தனை ஜன்மம் எடுத்துத் தீர்த்தாலும் தீராதே! ஹா! இச்சிசு என் வயிற்றின் கொதிப்பைத் தாங்காது இவ்விதம் துடிக்கின்றதோ! அல்லது இக்கல்லே இறுகக் கட்டியிருப்பதனுல் தத்தளிக்கின்றதோ! இப்பேர்ப்பட்ட சிசுவைக் கொல்லலாகாதே" என்று கருதிச் சற்று நிதானித்தாள். பின்னர் "எப்படியும் நாம் இறந்தே தீரவேண்டும்" என்று துணிந்து, "ஐயோ! எனது தற்கொலேயோடு சிசுவின் கொலேயும் செய்யும்படி எனது விதி முடிந்திருக்கிறதே! ஆகா! கருணநிதே! இவ்விதமெல்லாம் என்னைப் பரீக்ஷிக்கலாமா? ஐயோ என்னசெய்யலாம்? உம். நாம் இன்ன வழியாகத்தான் வந்தோம் என்பதையும் உணராமல் இவ்விடத்தை யடைந்துள்ளோமே. அந்த மனிதன் இங்கு வந்துவிடுவானேயானுல் நாம் தப்புவது துர்லபமாகிவிடும். ஆகையால் நாம் தாமதம் செய்யாது வேலையை முடிக்கவேண்டும்" என்று தீர்மானித்தவளாய் இரு கைகளையும் கூப்பியவாறு கடவுளைத் தோத்திரம் செய்து தண்ணீரில் குதிக்கப்போனுள். அச்சமயம் ஆகாயத்தில் மேகத்திடையே மறைந்திருந்த மதியம், மேகங்கள் சற்று விலக, தனது பூரண ஒளியுடன் தண்ணீரில் பிரதிபிம்பித்துத் தோன்றித் தண்ணீரின் அசைவால் ஆடி ஆடி விளங்கிற்று. அக்காட்சியானது நமது மின்னுளின் விழியில் தெற்றெனத் தோன்றிற்று. ஆகா! அப்போது அவள் மனத்தில் ஓர் நூதனமானதும், உருக்கமானதுமான எண்ணம் தோன்றுதற்கான ஓர் அரிய சம்பவம் நேர்ந்தது. அதாவது:— தண்ணீரில் தெரிந்த திங்களானது ஓர் அழகிய மனித உருவத்தின் முகம் போன்று அவள் கண்களுக்குத் தோன்றிற்று. அம்முகமானது அவளை நோக்கி, "ஆகா! அம்மா! எனதரிய தாயே! இந்நீரின் அலேயினுல் மதியம் ஆடுவதேபோல உனது வயிற்றிலுள்ள அன்பெனும் நீரின் மத்தியில் உனது அருமைக் குழந்தை

யாகிய யான், முழுதும் வளர்ச்சியடையாது ஆடிக்கொண்டிருப்பதை நீ யறியாயா? என்தாயே! நான் உன்னை என்ன செய்தேன்! என்னையுமா நீ பூலோகத்தில் ஜெனியாதவாறு கொலை செய்யத் துணிந்தாய்! நான் எனது தந்தையாகிய உனது பதியின் தரிசனத்தைக் காணவேண்டாமா! உன்னுடைய அபாரமான கற்பை மூடத்தனமாகச் சோதித்து உன்னையும், உனக்குள் அடக்கமாயுள்ள என்னையும் இவ்விதமான பரிபவம் செய்த என் தந்தையை நான் நேரில் கண்டு பேசி அவருக்கு உனது மாண்பை எடுத்தோத எண்ணியிருக்கும் என்னையுமா அனியாயமாகக் கொல்லப்போகிறாய்? அம்மா! வேண்டாம். நீ என்னைக் கொலை செய்யாதே! என் மனவேட்கையைக் கெடுக்காதே! அதை நீ யறியும் பொருட்டே நான் உன் வயிற்றில் குத்திக் காட்டினேன். நீ அதையும் கவனிக்காமையினால் இப்போது நான் உனது எதிரில் தோன்றி இதைக் கூறுகிறேன். என் தாயே! வேண்டாம். ஹத்தி செய்யவேண்டாம்'' என்று கூறுவது போன்ற ஒரு அற்புத தோற்ற முண்டாயிற்று;— அவ்வாறு தன் னெதிரில் மதியைப் பழிக்கும் முகத்துடன் ஓர் சிசு முகத்தை மட்டும் காட்டி மொழிவது போன்ற புதிய அற்புதமான காட்சி தோன்றியதைக் கண்டமின்னாள் அளவில்லாத குழப்பமும், சோகமும் அடைந்து, "ஐயோ! இதென்ன விந்தை! வயிற்றில் அரூபியாய்க் கிடக்கும் சிசு என்னெதிரில் தோன்றுவதுபோல ஒரு காட்சியுண்டாகி, அது என்னை வேண்டிக் கேட்பதுபோலான மொழிகள் என் செவியில் கணீர் கணீர் என்று ஒலித்து என் மனத்தை உருக்குகின்றனவே! ஆகா! எத்தகைய கடின சித்தமுடையவர்களின் ஹிருதயத்தையும் நொடியில் சாந்தம் செய்யக் கூடிய எழில் நிரம்பிய குழந்தையின் வதனம் கண்ணெதிரில் தோற்றுகின்றதே! அது தன்னைக் கொல்லவேண்டாமென்று என்னைக் கெஞ்சிக்கேட்பதுபோன்ற காட்சி தெரிகின்றதே! ஐயோ! நமது மனம் முன்கொண்ட துணிபுக்கு மாறாக இளகிப் போய் விட்டதுடன் அந்தச் சொற்களையும் தட்டக்கூடாத நிலைமையை அடைந்துவிட்டதே; நான் இந்த எதிர்பாராத சம்பவத்திற் கென்ன செய்வேன்?'' என்று துடிதுடித்து ஏங்கிச் சங்கடப்பட்டு அப்படியே படிகளின் மீது உட்கார்ந்துகொண்டாள். அவள் மனமானது அத்

தடாகத்தின் தெள்ளிய நீர் ததும்புவதுபோல கலக்கத்தினுல் தளும்புகின்றது. அதன்மேல் அவள், "ஆகா! நம்முடைய கண்ணெதிரில் திடீரென்று இவ்விதமான தோற்றமுண்டானது உண்மையானதா! அல்லது உருவெளித் தோற்றமா! அல்லது ஆகாயவாணியே நேரில் இவ்விதம் நமது மனத்தில் படும்படி இதை மொழிந்ததோ ஒன்றும் தெரியவில்லையே! நான் முற்றும் துறந்து உயிரைப் போக்கிக்கொள்ளத் துணிந்ததருணத்தில், ஏன் இவ்வித தோற்றமுண்டாகி எனது உறுதிப்பாட்டினின்றும் பிறழும்படி செய்யவேண்டும்? ஆகா! இவ்வித தோற்றமுண்டானதால் ஏதோ விசேஷமிருக்கவேண்டுமென்பது நிச்சயமாக விளங்குகின்றது; இல்லாவிடில் ஓர் குழந்தையின் முகம் நம் கண்களுக் கெதிரில் திடீரென்று தோன்றி இவ்வாறு பேசியிருக்கமாட்டாது; எல்லாமவனருளே! அச் சிசுவின் தோற்றம் கூறியபடியே அனியாயமாக அச்சிசுவை நாம் ஹத்திசெய்வது பாதகத்திலும் பெரும் பாதகமே; அது ஜனிப்பதற்கு இன்னும் 5 மாதங்களிருக்கின்றன; அந்த 5 மாதங்களையும் மெல்லக் கடத்திப் பின்னர் அச் சிசுவைப் பூலோகத்தில் சேர்த்துவிட்டு அதன்மேல் நாம் உயிரை விடுவதுதான் பொருத்தமானது; நம்முடைய நாயகர் எவ்வித விபரீத சிந்தையைக் கொண்டு நம்மை விலக்கி யிருந்தாலும், அவருடைய சிசுவாகிய இதை நாம் கொல்வதற்கு தர்மமு மில்லை; நமக்குச் சுயாதீனமு மில்லை. அவருடைய சொத்தை நாம் அவரிடமே சேர்ப்பித்து விடுவதுதான் நல்லது; நாம் இறந்துவிட்டபின்பு, ஒருசமயம் நம் நாதர், தாம் செய்ததும், சொல்லியதும் அக்ரமமானவை என்பதை யறிந்தால் மிகவும் வருந்தக்கூடும்; அப்படி வருந்துங் காலத்தில் அவருடைய சொத்தாகிய குழந்தையை யாகிலும் அவர் கண்டு, அதன் மூலமாக மனதில் ஆறுதலடையக்கூடும்; பிற்காலத்தில் நடக்கவேண்டியதை உத்தேசித்தே என் மனத்திற்கு இவ்வித தோற்றமுண்டாயிற்றோ! ஆ! ப்ராணபதே! உம்முடைய சொத்தாகிய சிசுவை உமதாக்கினையின்றிக் கொலை செய்ய நான் முற்பட்டதைக் குறித்து மிகுந்த விசனத்துடன் துடிக்கின்றேன்; யானும் தம்முடைய பொருளாக விருந்தும், தமதாளுகையிலிருந்து தாங்கள் அடியாளை நீக்கி, அன்னியனிடம் ஒப்புவித்துவிட்டபடியால், எனது

உயிர் தம்முடையதல்லவென்பது தீர்மானமாகிவிட்டது. ஆகையால் எனது உயிரை நான் தாராளமாக விடுவதற்கு எனக்குரிமை ஏற்பட்டிருக்கிறது. இதைப்பற்றி நான் எவருக்கும் அஞ்சவேண்டியதில்லை; எனினும் இக்குழந்தையின்பொருட்டு நான் கொஞ்சம் தாமதிக்கவேண்டியவளாயிருக்கிறேன்; தம்முடைய சொத்தாகிய இச்சிசுவை இன்னும் 5 மாதங்கள்வரை எவ்விதமேனும் தாங்கியிருந்து பின் இது ஜனித்தவுடன் உம்மிடம் இதனைச் சேர்த்துவிட்டால் எனது கவலை முற்றும் நீங்கிவிடும். இந்த 5 மாத காலத்தையும், நானிருப்பது தமக்குத் தெரியாதபடி கழிக்க வேண்டும். அவ்வாறு உம்முடைய கண்ணில் படாமல் இருக்க வேண்டியதற்கான உபாயத்தை நான் தேடிக்கொள்ளவேண்டும். அவ்விதம் மறைந்திருந்து என் காலத்தைக் கழித்து இச் சிசுவைத் தம்மிடம் சேர்த்துவிட்டுப் பின்னர் எனது வேலையை முடித்துக் கொள்கிறேன்; இதுவே தீர்மானமாகிய முடிவாகக் கொண்டு கரை ஏறுகிறேன்; ஐயோ! இச் சிசு வயிற்றில் தபிப்பதைநோக்கின் இது, நேரில் தெரிந்த காட்சி உண்மை என்பதை உறுதியாக்குகின்றது. ஆகா! சர்வேச்வரா! உனது திருவிளையாட்டு எங்தெந்த வழியில் செல்கிறதப்பா! எல்லாம் உன் செயலே; நீ யன்றி உலக மேது?'' என்று அலகிலா தெழுந்த பற்பல சிந்தனைகளோடு மெல்ல எழுந்து தனது மடியிலிருக்கும் கல்லை எடுத்து எறிந்தாள்.

அவ்வாறு வயிற்றில் பளுவாக விருந்த கல்லை அப்புறப் படுத்தவே, அவள் தேகம் கனங் குறைந்து இயற்கையாயிருந்த மிருதுத் தன்மையை அடைந்து கொடி போல் துவள ஆரம்பித்தது. அவள் மீண்டும் தன தாடைகளைச் சரியாகச் சீர்திருத்திக் கொண்டு அக்குளத்தில் இரண்டு கை தண்ணீரை அள்ளிப் பருகி விட்டுக் கரையில் வந்து உட்கார்ந்தாள். அப்போது நிர்மானுஷ்யமான அவ்விடத்திலிருப்பதனுல் அவளுக்கு அச்சமுண்டாயிற்று; அதனேடு தன்னைத் தேடிக்கொண்டு அம்மனிதன் வந்துவிடுவானே! என்ற பீதியும் அதிகமாகத் தோன்றிற்று. அதனுல் அவள் மிகவும் நடுகினுள். அவ்வாறு நடுங்கியபடியே,'' ஆகா! நாம் எண்ணியதொன்று; முடிந்ததொன்று: இவ்வாறு விஷயம் மாறியதை

எண்ணும்போது எனக்கு அளவற்ற வியப்புண்டாகிறது. உம்; நாம் இன்னும் இங்கிருப்போமேயானால் அந்த மனிதன் கையில்தான் சிக்கிக்கொள்வோம்; ஆதலால், நாம் உடனே எழுந்து நமது விதி அழைத்துச் செல்லும் வழியே நடப்போம்" என்று தீர்மானித்து, அவ்வாறே எழுந்து, அவ்விடத்தை விட்டுத் தன்னால் கூடியமட்டும் விசையாக நடக்க வாரம்பித்தாள். அவளுடைய மனப்ராந்தியால் பின்னால் யாரோ வருவதுபோலான நினைவு அடிக்கடி அவள் மனத்தில் உண்டாகிக்கொண்டிருந்தது. அப்படி யுண்டாகும் போதெல்லாம் அவள் திடும் திடும் என்று நடுங்கிக்கொண்டே திரும்பித் திரும்பிப் பார்த்தவண்ணமாக நெடுந்தூரம் நடந்து போனாள்.

ஒரு நாளிலாவது ஒரு அடி தூரமும் நடந்தறியாத அவ்வனிதை காட்டு மனிதர் போல முள்ளிலும், கல்லிலும் நடப்பதால் மிகுந்த வேதனை யடைந்து அதனால் தத்தளித்தவண்ணம் மெல்ல மெல்லப் போய்க்கொண்டே யிருக்கிறாள். அவ்வாறு செல்லும்போது, தனது காதலனாகிய சூரியன் வருகையை அதிக ஆவலுடன் எதிர் நோக்கிய தாமரைகள் நிறைந்த தடாகங்கள் வழியில் ஆங்காங்கே காணப்பட்டன; அருணோதயமாகிச் சூர்யோதயமும் ஆகிவிட்டது. ஆதித்தனின் தரிசனத்தினால் அலகிலாத் தாமரைகளும், மற்ற ஜந்துக்களும், ப்ராணிகளும் செழித்தன. மனிதர்களும் மனமகிழ்ந்தார்கள். நம் மரகதமணி அந்தக் கோட்டியில் பிறந்த ஒருத்தியாக விருந்தும், அவளுடைய மனம்மட்டும் அந்த பானுவின் வருகையினால் களிப்புற வில்லை. அவள் ஆம்பலைப்போல வாட்டமே அடைந்தாள். ஏனெனில், வெளிச்சமாகிவிட்டதால் தன்னைத் தெரிந்தவர்களோ, அல்லது தன் வீட்டிலிருக்கும் மனிதனோ தன்னைக் கண்டுவிட்டால் அபாய முண்டாகுமே என்ற கவலை அவளுக் கதிகரித்துவிட்டது. இயற்கையிலேயே நல்ல சிவப்பு வாய்ந்த அவளுடைய தேகமும், முகமும் தற்போதுள்ள கர்ப்ப சின்னத்தால் ஆயிரம் திங்கள் கூடி ஏககாலத்தில் ஜொலிப்பதுபோலான ஜோதியுடன் விளங்குகின்றன. அவள் தனது கரத்தையும், காலையும், மற்ற அவயவங்களையும் பார்த்துத் திடுக்கிட்டு, "ஐயோ! இத்தகைய வனப்புடனும், அதனோடு கர்ப்பத்துடனும் இருக்கும் என்னைப் பிறர் கண்டால்,

ஏதேனும் விபரீதமான எண்ணங் கொள்வார்கள்; ஆகா! அதுவும் எனது விதியினால் நேர்ந்தாலும் நேரலாம்; ஆதலின், நாம் உடனே இந்தச் சிவப்பைச் சிறிது மாற்றிக் கொண்டு மிகுந்த ஏழையான விறகு வெட்டியைப்போலச் சென்றால் பிறர் சந்தேகிக்க அவ்வளவாக ஏது விருக்காது" என்று எண்ணியவளாய் வழியில் கிடந்த கரியை எடுத்து அங்குள்ள குளத்துப் படியில் தண்ணீர் அள்ளி ஊற்றித் தேய்த்து அதைத் தனது முகத்தில் இலேசாகப் பூசிக்கொண்டு, தேகத்திலும் துணி மறைக்கும் பாகங்கள் தவிர மற்ற பாகங்களில் முழுதும் பூசிவிட்டுக் கையைக் கழுவிக்கொண்டு உள்ளங்கையைப் பார்த்தாள். அது செந்தாமரை இதழை நிகர்த்துத் திகழ்கின்றது. அதைப் பார்த்ததும் அவள் அஞ்சி அதற்கும் சிறிதளவு கரியைப் பூசிக்கொண்டு, துணியைச் சின்ன பின்னமாகக் கட்டிக்கொண்டு காட்டுக் குச்சிகளையும், வேர் விறகு களையும் பொறுக்கி ஒரு கட்டாகக் கட்டி அதனைத் தலைமீது தாங்கிக் கொண்டு விதியை எண்ணிப் புலம்பியவாறு மெல்ல நடந்து சென்றாள். அவ்வாறு சென்றுகொண்டிருக்கையில் வெயில் உக்ரமாக வீசியதால் வியர்வை முத்து முத்தாகக் கிளம்பி அவள் உடம்பில் பூசியிருக்கும் கரியை அழித்து வடிந்துகொண்டிருந்தது. அதோடு காலில் சூடு அதிகமாகத் தாக்க ஆரம்பித்ததால் அவள் நடப்பதற்கு மிகுந்த சிரமமாயிருந்தது. அவள் உடம்பில் பூசியிருந்த கரி முழுவதும் வியர்வையால் கலைந்து விட்டது. அதன்மேல் அவள், "சீச்சீ! இந்தப் பாவிக்கு நாமும் சகாயம் செய்யலாகா தென்ற எண்ணத்தால் இந்தக் கரிப்பூச்சும் கலைந்துவிட்டது" என்று வெறுப்படைந்து, அந்தப் பூச்சு முழுவதையும் அழித்து விட்டு, 'கடவுளிருக்கிறார்' என்ற துணிபான தீர்மானத்துடன் நடந் தாள்.

நேரம் செல்லச் செல்லச் சூரிய வெப்பமும் அதிகரித்தது; அதனால் அவள் நடக்கமாட்டாமல் தவித்துத் தத்தளித்து அங் குள்ள ஓர் மரத்தடியில், 'அடா! அப்பா!' வென்றுபோய் உட்கார்ந் தாள். பசியும், தாகமும் அதிகரித்து அவளை வருத்துகின்றன. அவள் என்ன செய்வாள் பாபம்! துயரத்தைச் சகிக்கமாட்டாது, "ஆ! ஜகதீசா! என்னைச்செய்த வதையெல்லாம் போதாதென்று இந்தப் பசியாகிய கொடிய நோயையும் என்னிடம் அணுகவிட்டு வேடிக்கை பார்க்கின்றாயே! இந்த மகாபாவிக்கு இந்நிர்மானுஷ்யமான விடத்தில் உனது திவ்ய நாமாவாகிய உணவைத் தவிர வேறு எது கிடைக்கும்? என்னுடைய கற்புமட்டும் உண்மையானதாக விருப் பின், உனது நாமத்தை பூஜித்தமாத்திரத்தில் எனது பசிப் பிணி பறந்தோடும்படிச் செய்யவேண்டும்" என்று கூறியபடியே கடவுளை தோத்திரஞ்செய்து பாடத்தொடங்கினாள்.

(18284)

**ஸ்ரீமதி வை. மு. கோதைநாயகி அம்மாள்**

எழுதிய அற்புதமான நாவல்கள்

**(சித்திரப்படங்கள் கூடியவை)**

## சண்பக விஜயம்

இதுவரையில் எழுதி வெளிவந்த நாவல்களைவிட இதில், ...வரும், சிறுமியரும் உவந்து படிக்கவும், போற்றவும், படித்ததை ...க்கவும், பிறருக்குச்சொல்லிப் புகழவும் தக்கபடி உயர்ந்த ...ளையும், உலகப்போக்கையும், கற்பின் பிரபாவத்தையும், பெரி...ன் பெருமையையும், நல்லோரின் நடவடிக்கைகளையும், உத்தம...ப்பெண்களின் இலக்ஷணங்களையும் அநேக மேற்கோள்களுடன் ...ங்க வைத்திருக்கிறது.

இதில் எந்தச் சம்பவமும் ஆச்சரியத்தை யுண்டாக்கக் கூடிய...ம், அறிவைப் புகட்டக் கூடியதாயும், தீயவருடைய மனதைத் ...த்தக்கூடிய வகையிலும் சிறந்து நிற்கும். விலை ரூ. 1-12.0.

**நமது சந்தா நேயர்கட்கு ரூ. 1-8-0.**

## வைதேகி

இதில் கதா நாயகியின் மன உறுதி, கற்பின் மாட்சி, உன்னத ...ணங்களின்உயர்ச்சி முதலியனவும் கதாநாயகி நாயகருடைய தெய்...க் காதலின் இலக்ஷணம், கீரைக்கார காமாக்ஷியின் உயரிய குணங்..., துப்பறிபவரின் திறமையும், லொள்ளுதுரை, லோகாற்புதம் ...ந்தார், பொக்கைக் கிழவி, மார்வாடி, சாரங்கபாணி, ஊரளந்...தான், அடியளந்தான் முதலியவர்களின் ஹாஸ்ய விநோத அற்புதச் ...செய்கைகளும் இன்னும் மற்ற ரஸங்களும் நிரம்பப் பெற்று ருசிகர...மாக விளங்குகின்றன. இது அநேக பத்திரிகைகளாலும் பிர...முகர்களினாலும் மதிக்கப்பெற்றது. 540-பக்கங்கொண்ட இப்புத்த...கத்தின் விலை ரூபாய். 2-8-0.

**நமது சந்தா நேயர்கட்கு ரூ. 2-0-0**

## பத்ம சுந்தரன்

இதில் மேனாட்டு நாகரிகத்தின் ஆடம்பரமும், முடிவில் அதனாலடையும் துன்பங்களும், பண்டைக்கால பழக்கத்தின் பெருமையும், கதா நாயக நாயகியின் ஒவ்வொரு அம்சத்தின் உயர்ந்த நோக்கமும், காதலின் திறமையும், துப்பறிபவரின் விசித்திரமான செய்கைகளும், செல்லப்பாவின் துயரமும், அவன் தன் தீயொழுக்கத்திலிருந்து உடனே திருந்துவதும், அவனது பெற்றோரின் நிலைமையும், மணத்தக்காளியம்மாள், சுண்டைக்காயம்மாள், அழுமூஞ்சி அண்ணாவி இவர்களின் ஹாஸ்யரஸப் பிரதானமான செய்கைளும் இன்னுமற்ற ரஸபாவங்களும் படிக்கப் படிக்க சலிப்பென்பதே தராமல் ஆநந்திக்கச்செய்யும். விலை ரூ. 2-8-0.

**நமது சந்தா நேயர்கட்கு ரூ. 2-0-0**

**"ஜகன் மோகினி" ஆபீஸ்**

**26, தோடித் தெரு, திருவல்லிக்கேணி, சென்னை.**

# அமிர்தாஞ்சனம்




எல்லா நோய்களுக்கும் திவ்ய ஔஷதம்

விலை அணா பத்து.

எல்லாக் கடைகளிலும் கிடைக்கும்.

## அமிர்தாஞ்சன் டிபோ,

7, தம்புச்செட்டி வீதி, சென்னை.



Published by V. M. Parthasarathy Iyengar
*for* "JAGANMOHINI OFFICE"
PRINTED AT THE TATA PRESS, MADRAS.